பக்கங்கள் 12

# காலைககதிர்

Kalaikkathir

விடியல் 09 | வள்ளுவர் ஆண்டு 2055 | மாசி 18 | ஞாயிற்றுக்கிழமை | 02.03.2025 | கதிர் 114



## எரிபொருள் தட்டுப்பாடே இல்லை பிரதி அமைச்சர் அனில் தெரிவிப்பு

சமூகத்தில் எவ்வித எரி பொருள் தட்டுப்பாடும் இல்லை. எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படுவதற்கு நாம் இடமளிக்கப் போவதுமில்லை. விலைத் திருத்தத்தை

☞2

## மீண்டும் பெற்றோலுக்கு வரிசை



நேற்று மாலை முதல் எரிபொருள் நிரப்பு நிலையங்களின் முன்பாக மக்கள் நீண்ட வரிசைகளில் நின்று பெற்றோல் பெற்றுக் கொண்டனர். குறிப்பாக மேர்டார்சைக்கிள் ஓட்டிகள் பெற்றோலைப் பெறுவதற்காக நீண்ட வரிசைகளில் காத்திருந்தனர்.

எரிபொருள் நிரப்பு நிலையங்கள் எரிபொருளைக் கொள்வனவு செய்வதிலிருந்து விலகிவிட்டதாக

☞2

## இது ரகசியம் அல்ல!

உள்ளூராட்சி சபைத் தேர்த லுக்கு -முன்பாக அவசரப்பட்டு ஊதிப் பெருப்பித்துக் காணபிக்கப்பட்ட ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் அரசியல்கூட்டு, மெல்ல மெல்ல சிதையத் தொடங்கிவிட்டது. இந்தக் கூட்டு அடித்தளம் ஏதுமற்றதாகவே தொடங்கப்பட்டது. சும்மா ஒரு கலந்துரையாடலுக்கு அனைவரையும் அழைத்துவிட்டு வந்தவர்கள் எல்லோரும் தம்மோடு சேர்ந்து போட்டியிடுவார்கள் என்று அறிவித்தார்கள். ஆனால், முதலிலேயே அந்தக் கூட்டில் தாங்கள் இல்லை, அதிலும் சங்குச் சின்னத்தில் போட்டியிடும் கூட்டில் தாங்கள் இடம்பெறப்போவதில்லை என்று தெரிவித்து விலகிவிட்டது ஐங்கரநேசனின் தமிழ்த் தேசிய பசுமை இயக்கம்.

அதைத் தொடர்ந்து தமிழ் மக்கள் கூட்டணியின் மணிவண்ணன் தரப்பும் அந்தக் கூட்டுக்குள் பேரம் படியாத காரணத்தால் நழுவி வந்தது. இப்போது தாம் உள்ளூராட்சி சபைத் தேர்தலைத் தனித்தே எதிர்கொள்ளப்

☞2

# வட்டுவாகல் விகாரையின் கீழ் மனிதப் புதைகுழி உண்மையைக் கண்டறிவதற்குத் தோண்டுங்கள்

## நாடாளுமன்றத்தில் ரவிகரன் எம்.பி. கோரிக்கை



**கடந்த 2009ஆம் ஆண்டு இறுதிக்கட்ட போரில்போது இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்கள் படுகொலைசெய்யப்பட்டு, தற்போது முல்லைத்தீவு - வட்டுவாகல் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள விகாரையின்கீழ் பகுதியில் புதைக்கப்பட்டிருப்பதாக மக்கள் பலரும் தம்மிடம் முறையிட்டுள்ளதாக வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.**

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற வரவு செலவுத் திட்ட நீதிமற்றும் தேசிய ஒற்றுமைப்பாடு அமைச்சிற்கான குழுநிலை விவாதத்தில் உரையாற்றியபோது இதனைத் தெரிவித்தார்.

மடியில் கனமில்லையெனில் விகாரையை அகற்றி அகழ்வினை மேற்கொண்டோ, நவீனமுறையில் ஸ்கேன் கருவிகள் மூலமாக ஆய்வுகளை மேற்கொண்டோ உண்மையைக் கண்டறிய ஆளும்தரப்பு முன்வரவேண்டுமென இதன்போது நீதி அமைச்சையும் கோரியுள்ளார்.

இதன்போது பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கி நீதியை வழங்குமாறும், அரசியல்கைதிகள் விவகாரம், காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம்,கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழிவிவகாரம், அரச திணைகளங்கள்

☞2

## அரச வாகன விற்பானை ஏலம் வெள்ளிக்கிழமை தொடங்கியது



ஜனாதிபதி அலுவலகத்திற்கு சொந்தமான 14 சொகுசு வாகனங்கள் மற்றும் பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்ட 6 வாகனங்கள், வாகன உதிரிப் பாகங்களை விற்பனை செய்வதற்கான ஏலம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. அரச செலவுகளை குறைத்தல் மற்றும் நிதி பொறுப்புக்களை ஊக்குவிப்பதை

☞2

## ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்கு நாடாளுமன்றில் வந்த சந்தேகம்

சபாநாயகரை சபை முதல்வர் இயக்குகிறார். உங்களை சபாநாயகர் என்று அழைப்பதா? அல்லது சபை முதல்வர் என்று அழைப்பதா? என்று சபைக்கு தலைமை தாங்கிய சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவை நோக்கி வினவிய ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி, கடந்த பாராளுமன்றத்தின் சபாநாயகர் பொம்மை போல் செயற்பட்டார். அவ்வாறு நீங்கள் செயற்படாதீர்கள். பதவிக்கான

☞2

## மக்கள் நலனுக்காக ஒற்றுமைக்குத் தயார்

### டக்ளஸ்ம் நேசக்கரம் நீட்டுகிறார்

தமிழ் கட்சிகள் எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒன்றிணைந்து எதிர்கொள்வது தொடர்பில் பேசுவதற்கு உத்தியோபூர்வமாக எனக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என தெரிவித்த ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின்

☞2



## மேலும் இருவர் கைது

கணேமுல்ல சஞ்சீவ கொலையுடன் தொடர்புடைய மேலும் 2 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு குற்ற விசாரணைப் பிரிவினரால் மினுவாங்கொடையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே குறித்த சந்தேக நபர்கள் கைதாகியுள்ளனர்.

குற்றத்தை வழி

☞2

## ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் பண விரயம் பற்றியும் விசாரணை

கடந்த காலங்களில் பெருமளவு பணத்தை வீணடித்ததாகக் கூறப்படும் ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் குறித்து சிறப்பு விசாரணையை ஆரம்பிக்க ஆளும்தரப்பு முடிவு செய்துள்ளது.

ஆளும்தரப்பு அத்தகைய விசாரணைகளை நடத்தி, அந்த ஆணையங்களின் உறுப்பினர்களிடமிருந்தோ அல்லது அப்போதைய ஆட்சித்

☞2

## வைத்தியருக்கும் தாதிக்குமான முரண்பாடே வைத்தியசாலைக் குழப்பத்திற்குக் காரணம்

### தாதியர்கள் சங்கம் அறிக்கை

யாழ். போதனா வைத்தியசாலையில் விபத்து, சத்திர சிகிச்சை அதி தீவிர சிகிச்சைப் பிரிவில்

☞2

## தேசபந்துவுக்கு எதிராக பயண தடை பிறப்பிப்பு



பிடியாணை பிறப்பிக்கப்பட்டு தலைமறைவாகியுள்ள பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனுக்கு பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டு

☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனிஇது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போவதாக அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பை யாழ். மாநகர சபையின் முன்னாள் மேயரான மணிவண்ணன் தனது முகப் புத்தகத்தில் அறிவித்துள்ளார். இதனால் இரண்டாவது விக்கெட்டும் இந்தக் கூட்டில் விழுந்துவிட்டது.

மூன்றாவதாக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கட்சியும் இந்தக் கூட்டிலிருந்து விலகத் துடித்துக்கொண்டிருக்கின்றது என்று தெரிகிறது. அந்தக் கட்சியின் தலைவர்கள் எவரும் இந்தக் கூட்டின் கலந்துரையாடல்களில் ஏற்கனவே கலந்துகொண்டிருக்கவில்லை. இருப்பினும் தமது பிரதிநிதிகளை அனுப்பி வைத்திருந்தனர். கலந்துரையாடலுக்குச் சென்ற பிரதிநிதிகளோ இந்தக் கூட்டில் இருக்கவேகூடாது என்று ஒற்றைக்காலில் நிற்கின்றார்கள். அதற்கு சட்டத்தரணி தவராசாவின் ஒப்புதலும் கிடைத்துவிட்டதாகக் கூறப்படுகின்றது. கட்சியின் மற்றொரு தலைவர் வெளிநாட்டில் உள்ள காரணத்தால் அவர் வந்ததும் இந்தக் கூட்டில் தாங்கள் இல்லை என்பதை அவர்களும் வெளிப்படையாக அறிவிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்படி ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி தம்மோடு இணைத்துக்கொண்ட 4 புதிய கட்சிகளில் 3 கட்சிகள் வில கிச் செல்லும் நிலையில், சந்திரகுமாரின் சமத்துவக் கட்சி மட்டுமே எஞ்சியிருக்கின்றது. சந்திரகுமார் முன்னாள் ஈபி டிபி உறுப்பினர் என்பதால், ஈபிடிபியினரையும் இந்தக் கூட்டில் சேர்த்துக்கொள்ளலாம் என்கிற ஒரு தேடல், ஆர்வம் இந்தக் கூட்டுக்குள் இருப்பதாகவும் சொல்லப்படுகின்றது. அது தொடர்பில் கூட்டணி யின் ஒரு சில தலைவர்கள் வெளிப்படையாகவே பேசியும் இருக்கிறார்களாம். தம்மை அழைத்தால் கூட்டுச் சேரத் தயார் என்று ஈபிடிபி செயலாளர் டக்ளஸ் தேவானந்தாவும்கூடத் தெரிவித்திருக்கிறார். ஏற்கனவே செல்வம் அடைக்கலநாதனும் ஆளும்தரப்பின் வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்திருக்கிறார். எனவே ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஈபிடிபியையும் சேர்த்துக்கொண்டு கொழும்பு க்கான ஆதரவுக் கூட்டணியாக மாறினாலும் ஆச்சரியப்படுவ தற்கில்லை என்று சில உள்வீட்டுத் தகவல்கள் கூறுகின்றன. என்னதான் நடக்கிறது என்று பொறுத்திருந்து பார்க்கலாம்.

..............................................

முன்னாள் தமிழ்த் தேசி யக் கூட்டடமைப்பின் பங்காளிகளுடன் மீண்டும் ஒன்றிணைந்து தேர்தல்களை எதிர்கொள்வதற்காக தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் சிவஞானம் எடுத்த முயற்சி, அவரது முதுகில் குத்தி தோற்கடிக்கப்பட்டமையால் இனியொருபோதும் தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமைக்குச் சாத்தியமில்லை என்பதையும் அது தொடர்பில் சிவஞானம் உத்தியோகபூர்வமாக ஊடகங்களுக்கு அறிவிப்பார் என்றும் இந்தப் பத்தியில் தெரிவித்திருந்தேன்.

அந்த அறிவிப்பை சிவஞானம் நேற்று வெளியிட்டுள்ளார். ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈபிஆர்எல்எப் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் ஆகியோருக்கு அனுப்பி வைத்த கடிதத்தை சிவஞானம் ஊடகங்களுக்கு வெளி யிட்டுள்ளார்.

நடைபெற உள்ள உள்ளுராட்சி தேர்தல்கள் தொடர்பாக தங்கள் மூவருடனும் கலந்துரையாடியது தொடர்பானது என்ற தலைப்பில் அனுப்பப்பட்டுள்ள அந்தக் கடிதத்தில், சுரேஸ் மற்றும் சித்தார்த்தனுடன் தான் பேசி, அடைக்கலநாதனுடன் நேரில் பேச நாளும் குறித்த பின்னர் வேறொரு கூட்டணியில் போட்டியிடப்போவதாக அவர்கள் அறிவித்தமை தனக்கு ஏமாற்றம் என்று சிவஞானம் குறிப்பிட்டுள்ளார். இந்த விடயத்தில் சுரேஸ்/ம் சித்தார்த்தனும் தனக்குச் செய்தது பச்சைத் துரோகம் என்று சிவஞானம் கடும் வெறுப்பில் இருந்தாலும், தனது முதுகில் குத்திய கீழ்த்தர அரசியல் என்று கருதினாலும், நாகரிகமாக அதனை ஏமாற்றம் என்ற ஒரு வார்த்தையில் மட்டுமே அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம் இந்தக் கட்சிகளின் போக்குக் காரணமாகவே தமிழ் அரசுக் கட்சி உள்ளூ ராட்சித் தேர்தலில் தனித்துப் போட்டியிடும் சூழல் உருவாக்கி யுள்ளதாகவும், அது இயல்பானதும் தவிர்க்க முடியாததுமாகும் என்றும் அவர் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

''நாம் இந்த முயற்சியை மேற்கொண்டது தனியே தேர்தலுக்காக அல்ல. எமது முயற்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இயங்கிய இந்த நான்கு கட்சிகளும் தமிழினத்தின் நலன் கருதி மீண்டும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்ற நோக்கத்துடனே ஆகும் என்பதை மீண்டும் பதிவு செய்கிறேன். இந்த முயற்சியை மேலும் தொடரவே விரும்புகிறேன். இதற்கான தங்களது இணக்கம் இருக்குமானால் நாம் தொடர்ந்து பேசலாம்'' என்றும் தெரிவித்திருக்கிறார். இதனை வைத்து மீண்டும் கூட்டமைப்பாகச் செயற்படும் நோக்கத்தோடு தமிழ் அரசுக் கட்சி முயற்சி செய்கிறது என்ற தோற்றப்பாட்டை உருவாக்க சில ஊடகங்கள் முயற்சிக்கின்றன. ஆனால், உண்மை அதுவல்ல.

கூட்டமைப்பைப் பிரித்தது தமிழ் அரசுக் கட்சி என்ற பழி யைச் சுமப்பதற்கு விரும்பாத அந்தக் கட்சி இப்போது தாம் நேசக்கரம் நீட்டியபோதும் அதை உதாசீனம்செய்து, கூட்டமைப்பைப் பிரித்தவர்கள் மற்றைய கட்சிகள்தான் என்பதை மக்கள் முன்னாள் பகிரங்கப்படுத்தியிருக்கிறது. அதைத் தக்கவைத்துக்கொள்வதற்காகவே அவர்கள் விரும்பினால் தொடர்ந்து பேச லாம் என்று தெரிவித்திருக்கின்றது. தமிழ் அரசுக் கட்சிக்குள் இந்தக் கட்சிகளை மீண்டும் இணைப்பதற்காக உளமாராச் செயற்பட்ட சிவஞானத்தின் முதுகில் குத்தியதற்குப் பின்னர் இவர்களை நம்பி களமிறங்குவதற்கு அந்தக் கட்சிக்குள் யாரும் இல்லை என்பதுதான் யதார்த்தம். நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் இந்த இணைவு குறித்துப் பேசினாலும் தலைமைப் பதவியைப் பிடிக்கும் வரையில் அவர் இது விடயத்தில் எந்த முயற்சியையும் எடுக்கமாட்டார் என்றே தெரிகிறது. அவரது தலைமைப் பதவியோ பிள்ளையார் கலியாணம் போல நாளை, நாளை என்று நீண்டு கொண்டே போவதால் அதற்கிடையில் நான்கு தேர்தல்களாவது இந்த இரு தரப்புக்களாலும் தனித் தனியே எதிர்கொள்ளப்பட்டிருக்கும். தேர்தலுக்குப் பிற காவது சேர்ந்தியங்கும் நிலை ஏற்படுமா என்றால், அதற்கான வாய்ப்புக்களும் மந்தமாகவே இருக்கின்றன என்றுபடுகின்றது.

"நாம் தனித்து போட்டியிட்டாலும் தேர்தலுக்குப் பின் இணைந்து வடக்கு- கிழக்கில் உள்ள சகல தமிழ் உள்ளூ ராட்சி மன்ற நிர்வாகங்களையும் நாம் கைப்பற்றும் முகமாக தேர்தலுக்குப் பின் செயற்படு வதற்கான உடன்பாடு ஒன்றை தேர்தலுக்கு முன்னரே ஏற்பாடு செய்தல். இதற்கும் தங்களது உடன்பாடு இருக்கும் என்றால் நாம் தொடர்ந்து பேசலாம். தங்களது துரித பதிலுக்கு நன்றி உடையவராவோம்" என்று சிவஞானம் தனது கடிதத்தில் தெரிவித்திருக்கிறார். ஆனால், எந்தவொரு சபையையும் தொகுதியையும் தாம் உறுதியாகக் கைப்பற்றுவோம் என்கிற நம்பிக்கையும், உறுதியும் இல்லாத நிலையில் தமிழ் அரசுக் கட்சியுடன் அது பற்றிப் பேசப் போவது உசிதம் அல்ல என்று ஜனநாயகக் கூட்டணி கருதுவதால், தேர்தலுக்கு முன்னர் அத்தகைய பேச்சுக்கும் சாத்தியமில்லை.

தேர்தலுக்குப் பின்னர் என்றால் நிலமைக்கு ஏற்ப இந்தக் கட்சிகள் 'டிமான்ட்' பண்ணக்கூடும் என்பதால் தேர்தலுக்குப் பின்னரான எந்தவொரு இணக்கம் குறித்தும் தேர்தலுக்கு முன்னரே எட்டப்படவேண்டும் என்பதில் தமிழ் அரசுத் தரப்பு பிடிவாதமாக இருக்கின்றது. அதனால் கூட்டமைப்பின் மீள் இணைவு என்பது அரசியல் களத்தில் மீண்டும் சாத்தியமற்றது என்பதே யதார்த்தம்.

**இடிமின்னல்**

## எரிபொருள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படையாகக் கொண்டு எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் உரிமையாளர்களால் இந்த பிரச்சினை திட்டமிட்டு தோற்றுவிக்கப்பட்டுள்ளது தொழில் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னான்டோ தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

உண்மையில் எவ்வித எரிபொருள் தட்டுப்பாடும் இல்லை. எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படுவதற்கு நாம் இடமளிக்கப்போவதுமில்லை. இருப்பினும் அச்சம் காரணமாகவே எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கருகில் நீண்ட வரிசைகள் ஏற்பட்டுள்ளன.

இதற்குப் பொறுப்பு கூறவேண்டியது யார் என்பது சரியாக இனங்காணப்படவில்லை. எரிபொருள் விநியோகம் இடம்பெறவில்லையென சமூக வலைத்தளங்களில் பரவலாக தகவல்கள் பகிரப்படுகின்றன. குறிப்பிட்டவொரு சங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் நபரொருவர் எரிபொருள் விநியோக நடவடிக்கைகளிலிருந்து தாம் விலகுகிறார் என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் எரிபொருள் விநியோகம் எவ்வித தடையும் இன்றி முன்னெடுக்கப்படுகிறது.

அவ்வாறிருக்கையில் சமூக வலைத்தளங்களில் எதற்காக இவ்வாறான செய்திகள் பரப்பப்பட்டன என்பது தெரியவில்லை. எரிபொருள் விநியோக செயற்பாடுகளைச் சீர் குலைப்பதற்காகவே திட்டமிட்டு இவ்வாறான சதிதிட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கும் எரிபொருள் விநியோகத்தர்களுக்கும் இடையில் தொடர்ச்சியாக பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளது. இதன் போது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தாம் எரிபொருள் விநியோக நடவடிக்கைளிலிருந்து விலகுவதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை.

இவ்வாறு பொறுப்பற்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதை அனுமதிக்க முடியாது. தாம் விநியோக செயற்பாடுகளிலிருந்து விலகுவதாகக் கூறிவிட்டு முற்பதிவுகளை வழமை போன்று செய்திருக்கின்றனர். சில விநியோகத்தர்கள் வழமையை விட அதிக அளவில் எரிபொருட்களை முற்பதிவு செய்திருக்கின்றனர்.

அதற்கமைய இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் முற்பதிவுகள் 1,696 உம், லங்கா ஐ.ஓ.சி. 471உம், சினொபெக் 391, ஆர்.எம்.பார்க் 366 முற்பதிவு செய்யப்பட்டுள்ளன. அதற்கமைய ஒட்டுமொத்தமாக 2,924 முற்பதிவுகள் பதிவாகியுள்ளன. பெற்றோலிய கூட்டுத்தாபனத்தில் வழமையாகப் பதிவாகும் 1300 முற்பதிவுகளை விட இம்முறை 1600 என்றளவில் பதிவாகியுள்ளது. இது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

எவ்வாறிருப்பினும் இதன் உண்மையான பின்னணியை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். எரிபொருள் நிரப்பும் நிலைய உரிமையாளர்களின் இலாப நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதன் காரணமாகவே விலை நிர்ணயம் இடம்பெறும் கால கட்டங்களில் இவ்வாறான பிரச்சினைகள் தோற்றுவிக்கப்படுகின்றன.

பெப்ரவரி 25ஆம் திகதியே விலை மாற்றம் தொடர்பில் நாம் அறிவித்திருக்கின்றோம். ஆனால் இதன்போது எரிபொருள் விநியோகத்தர்கள் எமக்கு எந்தவொரு விடயம் தொடர்பிலும் கருத்து தெரிவிக்கவில்லை.

அல்லது 28ஆம் திகதி வழக்கு விசாரணை இடம்பெற்ற போதும்கூட இது தொடர்பில் அவர்கள் அறிவித்திருக்கலாம். ஆனால் அதனையும் செய்யவில்லை. மாறாக திடீரென எரிபொருள் விநியோகத்தில் இருந்து விலகுவதாக அறிவித்து பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளனர் என்றார்.

## வைத்தியருக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடமை புரியும் வைத்தியர் ஒருவருக்கும் பொறுப்புத் தாதிக்கும் ஏற்பட்ட சிறிய கருத்து முரண்பாட்டின் பின்னணியிலேயே வைத்தி யசாலையில் அசாதாரண சூழ்நிலை தோன்றியுள்ளது என அரச தாதிய உத்தியோகத்தர் சங்கத்தின் யாழ்ப்பா ணம் போதனா வைத்திய சாலை கிளை தெரிவித்துள்ளது. யாழ். போதனா வைத்திய சாலையில் விபத்து, சத்திரசிகிச்சை அதிதீவிர சிகிச்சைப் பிரி வில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை சம்பந்தமாக வைத்தியசாலையின் அரச தாதி உத்தியோகத்தர் சங்கத் தலைவர் பானுமகேந்திரா வெளியிட்ட அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளதாவது மேற்படி பிரிவு 20 வருடங்களுக்கு மேலாக யாழ் மக்களுக்குத் தேவையான அவசியமான பராமரிப்பு முறைகளை திட்டமிட்டு தொடர்ச்சியாக வழங்கி வருகிறது.

இங்கு மிகக்குறைந்த தாதியர் ஆளணியுடன் வினைத்திறனான சேவையை வழங்கி வருகின்றனர். இந்த அலகிற்கான சேவையை வழங்க ஆகக்குறைந்தது 30 தாதிய உத்தியோகத்தவர்கள் தேவைப்படும் நிலையில் 13 தாதிய உத்தியோகத்தர்களே கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

மேற்படி விடுதிப் பராமரிப்பு திட்டங்களை தர நிலையிலுள்ள தாதிய உத்தியோகத்தர் ஒருவர் கடந்த 4 வருடங்களுக்கு மேலாக திறம்பட முகாமைத்துவம் செய்து வருகின்றார். இவர் 20 வருடங்களுக்கு மேலான சேவை அனுபவத்தினை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் நிறைவு செய்த ஒரு அர்ப்பணிப்பான சேவையாளர் என்பதனை குறிப்பிட விரும்புகின்றோம்.

இவர் கடமைபுரிந்த காலப்பகுதியில் தனது குழு உறுப்பினர்களுடன் (வைத்தியர்கள், தாதியர்கள், சிற்றூழியர்கள்) மிகவும் அந்நியோன்னியமான உத்தியோக ரீதியான உறவு முறையினை பேணி நோயாளர் பராமரிப்புத் திட்டத்திற்கு வெற்றிகரமான செயற்பாட்டினை உறுதி செய்துள்ளார்.

மிகக் குறுகிய காலத்தில் அங்கு கடமை புரியும் வைத்தியர் ஒருவருக்கும் பொறுப்புத் தாதிக்கும் ஏற்பட்ட சிறிய கருத்து முரண்பாட்டின் பின்னணியில் இந்த அசாதாரண சூழ்நிலை தோன்றியுள்ளது. இது சம்பந்தமாக ஆரம்பகட்ட விசாரணைகள் முடிவடையும் தறுவாயில் இருப்பதுடன் சுகாதார அமைச்சின் முறையான விசாரணைக்கு இவ்விடயம் உட்படுத்தப்பட்டுள்ளது. விசாரணை முடிவடையும் பட்சத்தில் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயமான தீர்வொன்றினைப் பெற்றுக்கொள்ள முடியும் என நாம் கருதுகின்றோம்.

எனவே இந்த விடயம் சம்பந்தமாக எமது சேவையைப் பெற்றுக்கொள்ளும் அனைத்து மக்களும் சேவையின் அவசியத்தினை உணர வேண்டும் என்பதனையும் தேவையற்ற விடயங்களை கருத்தில் எடுக்க வேண்டாம் எனவும் வினயமாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

மேற்படி விடயம் சம்பந்தமாக பத்திரிகைகளில் வெளிவரும் செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை என்பதனையும் இவை எமது கண்ணியமான சேவைக்கு களங்கம் ஏற்படுத்தும் விதமாக அமைந்துள்ளது என்பதையும் மக்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

இந்த முரண்பாடுகள் திட்டமிட்ட ரீதியில் குறிப்பிட்ட சில நபர்களால் மேற்கொள்ளப்படும் சதி நடவடிக்கைகள் என்பதனை மக்கள் புரிந்துகொண்டு விழிப்பு ணர்வுடன் செயற்பட வேண்டிய காலப்பகுதியில் இருக்கிறோம் என்பதனை தெளிவுபடுத்த விரும்புகிறோம்.

எமது வைத்தியசாலையில் அர்ப்பணிப்பாக சேவைபுரியும் வைத்தியநிபுணர்கள், வைத்தி யர்கள் கடமையாற்றுகின்றனர். அவர்கள் எம்முடன் குழுவாக இணைந்து மக்களுக்கான சேவையினை தங்குதடையின்றி இதுவரை வழங்கி வந்துள்ளார்கள். இவ்வாறான சேவை இவர்களுடன் இணைந்து தொடர்ந்து வழங்கப்படும் என்பதனை உறுதிபட தெரிவித்துக் கொள்கின்றோம் - என்றுள்ளது.

## வட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும், அரசபடைகளால் தமிழ் மக்களின் காணிகள் ஆக்கிரமிக்கப்படும் விவகாரங்கள் என்பவற்றிற்கும் நீதியை வழங்குமாறும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் நீதி அமைச்சைக் கோரியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும்

தொடர்ச்சி 8ஆம் பக்கம்......

காலைக்கதிர் Kalaikkathir

## தொழில்முனைவோர் வெற்றியாளர்களுக்கான போட்டி நேர்முகம்

(ஹலால்தீன் )

இலங்கை மகளிர் பணியகம் நடத்திய தொழில் முனைவோர் பெண்களுக்கான மதிப்பீட்டில் பிரதேச மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றவர்களில் மாவட்ட மட்டத்தில் வெற்றியாளரைத் தெரிவு செய்யும் நேர்முகத் தேர்வு வெள்ளிக்கிழமை திருகோணமலை மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சுதாகரன் தலைமையில் மாவட்ட செயலக உப ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்டத்தின் 11 பிரதேச செயலகப் பிரிவுகளில் வெற்றி பெற்றவர்கள் தமது உற்பத்திப் பொருள்களைக் கொண்டு வந்து நேர்முகத் தேர்வில் கலந்துகொண்டனர்.

இதன்போது மூதூர் பிரதேச செயலகப் பிரிவை பிரதிநிதித்துவப்படுத்தும் திருமதி ஏ.எஸ்.சப்ரினா ஆயுர்வேத பொருள்களை உற்பத்தி செய்து போட்டியில் வெற்றிபெற்று தேசிய மட்டத்தில் நடைபெறவிருக்கும் நிகழ்விற்கு தெரிவு செய்யப்பட்டார்.

## கேரளக் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் சட்டத்தரணி குற்றவாளி என நீதிமன்று தீர்ப்பு

வவுனியாவில் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டு தொடர்பில் சட்டத்தரணி ஒருவரை குற்றவாளியாக அடையாளம் கண்ட வவுனியா நீதிவான் நீதிமன்று அவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து தீர்ப்பளித்ததாக செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா நீதிவான் நீதிமன்றில் வெள்ளிக்கிழமை வழக்கு விசாரணை இடம்பெற்ற போதே இவ்வாறு தீர்ப்பளிக்கப்பட்டது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

கடந்த 2021 ஆம் ஆண்டு விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து செட்டிகுளம் பகுதியில் வைத்து இளம்சட்டத்தரணி ஒருவரிடம் சோதனை நடத்தப்பட்டது. இதன்போது அவரது உடைமையில் கஞ்சா இருந்ததாக தெரிவித்து குறித்த சட்டத்தரணி விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டு செட்டிகுளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளின் பின் செட்டிகுளம் பொலிஸாரால் வவுனியா நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. குறித்த சட்டத்தரணி விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டு, இது தொடர்பான வழக்கு வவுனியா நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்று வந்தது. இந்நிலையில் வெள்ளிக கிழமை அதற்கான தீர்ப்பு அறிவிக்கப்பட்டது.

அந்தவகையில், கஞ்சாவை உடைமையில் வைத்திருந்தமை மற்றும் அதனை கொணண்டு சென்றமை என்பன தொடர்பாக சட்டத்தரணியை குற்றவாளியாக அடையாளம் கண்ட நீதிமன்றம் அவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்து தீர்ப்பளித்தது.

இதேன்போது, குறித்த சட்டத்தரணி சார்பாக ஆஜராகிய சட்டத்தரணிகள் மேன்முறையீடு தொடர்பான அறிவித்தலை நீதிமன்றில் வழங்கியதன் பிரகாரம் அவருக்கு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான சரீர பிணை வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை, குறித்த சட்டத்தரணியும் வவுனியா நீதிமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டத்தரணி என்பதும் குறிப்பிடத்தக்கது. 100

# பொத்துவில் பகுதியில் வெளிநாட்டவருக்கு பாடசாலைகளை இயங்க வைக்க வேண்டும்

## இம்ரான் எம்.பி. தெரிவிப்பு




(ஹஸ்பர்)

பொத்துவில் பிரதேசத்தில் வெளிநாட்டவர்கள் பாடசாலையொன்று நடத்தி வருவதாகவும், இந்தப் பாடசாலை கிழக்கு மாகாண சபையில் பதிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. இந்த விடயம் குறித்து அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

பொத்துவில் பிரதேசத்தில் ஏ.பி.சீ.அறுகம்பை கல்லூரி என்ற பெயரில் பாடசாலையொன்று இயங்குவதாகவும் அது கடந்த ஆட்சிக் காலத்தில் கிழக்கு மாகாண சபையின் பாலர் பாடசாலை கல்விப் பணியகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது. இந்தப் பாடசாலையைக் காரணம் காட்டி விசா பெற்று சில வெளிநாட்டவர்கள் தொடர்ச்சியாக இங்கு தங்கி வருகின்றனர் எனவும் கூறப்படுகின்றது.

இதில் ஏதும் முறைகேடுகள் அல்லது பின் புலங்கள் உள்ளனவா என்ற சந்தேகம் நிலவுதாக பொத்துவில் பிரதேச மக்கள் சிலர் எனது கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

கல்லூரி என்ற பெயரில் பாலர் பாடசாலையொன்றைப் பதிவு செய்ய முடியுமா? வெளிநாட்டவரின் பெயரில் இந்தப் பாடசாலை என்ன அடிப்படையில் பதிவு செய்யப்பட்டுள்ளது? அதற்கான ஏற்பாடுகள் பாலர் பாடசாலை நியதிச் சட்டத்தில் உள்ளதா? என்ற சந்தேகங்களுக்கு நாட்டின் தேசிய நலன் கருதி தெளிவுகாண வேண்டிய அவசியம் தற்போது ஏற்பட்டுள்ளது.

பாலர் பாடசாலைப் பணியகத்தில் பதிவு செய்து ஆரம்ப, இடைநிலை கல்வி நடவடிக்கைகளும் இங்கு முன்னெடுக்கப்படுகின்றனவா அல்லது வேறு ஏதும் அரச அங்கீகாரம் இக்கல்லூரிக்கு வழங்கப்பட்டுள்ளதா? என்பன குறித்து அவதானத்தை செலுத்த வேண்டியுள்ளது.

வெளிநாட்டவரின் பிள்ளைகள் தான் இங்கு கல்வி கற்பதாகக் கூறப்படுகின்றது. அப்படியாயின் பொத்துவில் பகுதியில் எத்தனை வெளிநாட்டுக் குடும்பங்கள் நிரந்தரமாகத் தங்கியுள்ளன. அவர்கள் எந்த நாட்டுப் பிரசைகள் என்ன அடிப்படையில் அவர்கள் தங்கியுள்ளார்கள்? எத்தனை வெளிநாட்டவரின் பிள்ளைகள் இங்கு கல்வி கற்கிறார்கள் என்பன குறித்தும் ஆராய்ந்து அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும்.

அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள பாடசாலைகள் என்றால் அவை கிரமமாக மேற்பார்வை செய்யப்படவேண்டும். இப்பாடசாலை மேற்பார்வை செய்யப்படுகின்றனவா? இதனை மேற்பார்வை செய்வோர் யாவர்? அவர்களின் தகைமைகள் என்ன? என்பன குறித்தும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

சில அதிகாரிகளால் இப்பாலர் பாடசாலை முறைகேடாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதாவும், இதற்காக வருடாந்தம் சிலருக்கு விசா நீடிப்புக்கு சிபார்சு செய்யப்படுவதாகவும் இதனடிப்படையில் சில வெளிநாட்டவர்கள் தொடர்ச்சியாக இங்கு தங்கி வருனிக்றன எனவும் கூறப்படுகிறது. இதில் முறைகேடு அல்லது ஊழல் ஏதும் உள்ளனவா என்பது குறித்தும் விசாரித்து தெளிவு காண வேண்டியுள்ளது.

இவ்வாறு அந்த அறிகையில் அவர் தெரிவிததுள்ளார்.

# உள்ளூராட்சிசபை தேர்தலுக்கு தயாராகிறது சர்வஜன அதிகாரம்

## கட்சியின் ஆதரவாளர்களுடன் சந்திப்பு





நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபை தேர்தல் தொடர்பாக சர்வஜன அதிகாரம் கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களுடனான சந்திப்பு ஒன்று வவுனியா நகரசபை மண்டபத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் பிரியந்த குமார் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் கட்சியின் தேசிய அமைப்பாளர் திலும் அமுனுகல, கட்சியின் பிரதித் தலைவரும், முன்னாள் அமைச்சருமான எஸ்.எம்.சந்திரசேன ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைகளை முன்வைத்திருந்தனர்.

குறிப்பாக வவுனியா மாவட்டத்தில் உள்ளூராட்சி தேர்தலில் கட்சி போட்டியிடவுள்ளமை தொடர்பாகவும், கட்சியின் நோக்கம் மற்றும் செயற்பாடுகள் தொடர்பாகவும் மக்களிற்கு தெளிவுபடுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் கட்சி ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர். 100

# ஆசிரியர்களுக்கான வழிகாட்டல் செயலமர்வு



(முகம்மட் இம்றான்)

கிண்ணியா அல் - மினா மகாவித்தியாலத்தில் முஸ்லிம் எயிட் நிருவனத்தினால் 'பாது காப்பு ' எனும் தொனிப்பொருளில் ஆசிரியர்களுக்கான செயலமர்வு வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

முஸ்லிம் எயிட் நிகழ்ச்சி அபிவிருத்தி முகாமையாளர் எம்.எம்.ஜனுள் யாஸீர் வளவாளராக கலந்துகொண்டு சிறப்பித்தார்.

இக்கால சூழ்நிலையில் நாம் எவ்வாறு மாணவர்களை துஷ்பிரயோகங்களிலிருந்து பாதுகாப்பது, மாணவர்கள் துஷ்பிரயோகங்களிலிருந்து தவிர்க்க நடைந்து கொள்ளும் முறைகள், சிறுவர் உரிமைகள் பற்றி தெளிவூட்டப்பட்டன.

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# புதிய மொந்தையில் பழைய கள்

"வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இராணுவ வசமுள்ள காணிகள் முறையான மீளாய்வுகளுடன் கட்டம் கட்டமாக விடு விக்கப்படும். அத்தியாவசியமான இராணுவ முகாம்களை தவிர்த்து ஏனையவற்றை நீக்குவதற்கு விசேட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். காணி விடுவிப்புக் குறித்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் வகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

"மக்களின் ஆதரவுடன்தான் நாடு என்ற ரீதியில் முன்னேற்றமடைய முடியும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களும், பெருந்தோட்ட மக்களும் ஆளும்தரப்புக்கு விசேட ஆணை வழங்கியுள்ளார்கள். ஆகவே அனைத்து இன மக்களையும் ஒன்றிணைத்தே செயற்படுகிறோம். பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் அனைத்து சிறப்புரிமைகளையும் நீக்கிக் கொண்டு இந்த வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்துள்ளோம்.

பாதுகாப்பு அமைச்சுக்கு பெருமளவிலான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்படுகிறது. பாதுகாப்பு அமைச்சின் கீழ் முப்படைகள் உள்ளடங்களாக 25 நிறுவனங்கள் காணப்படுகின்றன. ஆகவே இராணுவத்துக்கு மாத்திரம் அதிக நிதி ஒதுக்கப்படவில்லை.

தேசியப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தவும், மக்களின் பொதுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தவும் இராணுவத்தினர் உட்பட முப்படையினரும் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர். இயற்கைப் பேரிடர் ஏற்பட்டாலும் இராணுவத்தையே அழைக்கிறோம். ஆகவே முப்படையின் சேவையை ஒருபோதும் குறைத்து மதிப்பிட முடியாது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள இராணுவ முகாம் மற்றும் இராணுவம் வசமுள்ள காணிகள் குறித்து அப்பிரதேசங்களின் பிரதிநிதிகள் பல விடயங்களை முன்வைத்துள்ளனர். இவ்விடயம் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சுசார் ஆலோசனை குழுவிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இராணுவம் வசமுள்ள காணிகள் முறையான மீளாய்வுகளுடன் கட்டம் கட்டமாக விடு விக்கப்படும். அத்துடன் அத்தியாவசியமான இராணுவ முகாம்களை தவிர்த்து ஏனையவற்றை முறையான திட்டங்களுடன் அகற்றுவதற்கு விசேட நடவடிக்கை எடுக்கப்படும்.

வடக்கு மாகாணத்தில் பல ஆண்டுகளாக மூடப்பட்டிருந்த பலாலி மற்றும் அச்சுவேலி வீதிகள் திறக்கப்பட்டுள்ளன. கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் உட்கட்டமைப்பு வசதிகளுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பலாலி விமான நிலைய அபிவிருத்தியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்ட ஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்" என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

மீளாய்வின் பின்னர் காணிகள் விடுவிக்கப்படும் என்று சொல்வதற்கு தேசிய மக்கள் சக்தியின் ஆட்சி மாற்றம் அவசியமற்றது என்பதுதான் தமிழ் மக்களின் நிலைப்பாடு. ஏனெனில் போர் முடிந்த கடந்த 15 வருடங்களாக அவர்கள் இதனையேதான் தொடர்ந்து கேட்டு வருகின்றார்கள். ஆனால், காணிகள் விடுவிக்கப்பட்டபாடாக இல்லை.

இராணுவத்தினர் தோட்டம் செய்து வரும் இடங்களை மீண்டும் மக்களிடமே கையளிப்பதற்கு வருடக்கணக்கான மீளாய்வும் கட்டம் கட்டமான யோசனையும் ஏன் அவசியமாகிறது என்று தெரியவில்லை, புரியவில்லை. பாதுகாப்பு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைத் தக்கவைப்பதற்குத் தேவையான இடங்களைத் தேர்வு செய்வதற்கு ஒன்றரை தசாப்தகாலத்திற்கும் மேல் ஏன் இலங்கைப்படைகளுக்குத் தேவைப்படுகின்றது என்பதையும் புரிந்துகொள்ளமுடியவில்லை.

அரசியல் ரீதியாக இவை எல்லாம் தமிழர்களுக்கு எதிரான இன அரசியலின் வெளிப்பாடு, அடக்குமுறையின் வடிவம், தமிழ் இனச் சிதைப்பின் ஓர் பகுதி என்றே புரிந்துகொள்ளப்பட்டிருக்கின்றன. ஆனால், அவையெல்லாம் கடந்த காலங்கள், எமது ஆட்சியில் இன, மத வாதங்களுக்கு எல்லாம் இடமேயில்லை என்று கூறும் ஒரு ஆட்சியிலும் மகிந்தவினதும் ரணிலினதும் வாயிலிருந்து வந்த அதே வார்த்தைகள் அச்சுப் பிசிறாமல் வந்து விழுகின்றன. ரணில் விக்கிரமசிங்கவும் இதையேதான் கூறினார். 2015இல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆசீர்வாதத்துடன் ஆட்சிக்கு வந்தபோதும் இதையேதான் கூறினார். 2022இல் அரசுத் தலைவரானபோதும் இதையேதான் கூறினார்.

காணிகளைக் கட்டம் கட்டமாக விடுவிப்பது தொடர்பாக ஆராய்வதற்காகக் குழு நியமிக்கப்பட்டிருக்கின்றது என்றெல்லாம் அறிக்கைவிட்டார் ரணில், ஆனால் நடந்தது ஒன்றுமில்லை. மிகச் சிறிய காணித் துண்டுகளின் விடுவிப்புத் தவிர ஏனைய ஆக்கிரமிப்புக்கள் விடுவிக்கப்படவில்லை. வடக்கு கிழக்கின் பெரும் வளம்மிக்க பிரதேசங்களை படைகள் தொடர்ந்தும் ஆக்கிரமித்தே வைத்திருக்கின்றன. அவற்றை விடுவிப்பது தொடர்பில் இந்த ஆளும்தரப்பும் அதே கதையைச் சொல்லத் தொடங்கியிருப்பதும் வீதிகளை விடுவித்ததையே தமது சாதனையாகக் காட்ட முயற்சிப்பதும் ஏமாற்றம்தரும் கவலைக்குரிய விடயம். தமிழர்களைப் பொறுத்த வரையில் தேசிய மக்கள் சக்தி ஆட்சியும் புதியமொந்தையில் பழைய கள் என்பதாகத்தான் இருக்கின்றது.

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மேலதிகமாக ரூ. மூவாயிரம்

## திருக்கோவில் வலயத்தில் நடைமுறை

(சகாதேவராஜா)



திருக்கோவில் வலயக் கல்விப் பிரதேசத்திலுள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கு அதிஷ்டம் அடித்துள்ளது. திருக்கோவிலைச் சேர்ந்த பிரபல தொழிலதிபரும் கல்முனை றோட்டரிக்கழகத்தின் முன்னாள் தலைவருமான பொறியியலாளர் சுந்தரலிங்கம் சசிகுமார் இந்த அதிர்ஷ்டத்தை வழங்கியுள்ளார்.

திருக்கோவில் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கு தமது கொடுப்பனவுக்கு மேலதிகமாக மாதாந்தம் 3000 ரூபாவை வழங்கி வைக்கும் வேலைத்திட்டம் நேற்று (28) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

பிரதம அதிதியாக பிரபல சமூக செயற்பாட்டாளரும் கல்முனை ரோட்டரிகழகத்தின் முன்னாள் தலைவருமான பொறியியலாளர் சுந்தரலிங்கம் சசிகுமார் கலந்து சிறப்பித்தார்.

திருக்கோவில் வலய முன்பள்ளி பாடசாலைகள் உதவிக் கல்விப் பணிப்பாளர் விவேகானந்தராஜா உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

இது பாலர் ஆசிரியர்களுக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்ட ஆறு மாத தொடர்ச்சியான நிதி உதவித் திட்டமாகும். சுமார் 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சுந்தரலிங்கம் சசிகுமார் வழங்கி வருகிறார்.

இந்த நிதி உதவித் திட்டத்தின் மூலம் மொத்தம் 164 ஆசிரியர்கள் பயனடைகிறார்கள்.

# "தவறிக்கூட எம் பக்கம் வராதீர்கள்" திலித்தைப் பார்த்து கூவிய ஹரினி

சர்வஜன அதிகாரம் கட்சித் தலைவரான திலித் ஜயவீர நாடாளுமன்றத்திற்கு மத்தியில் ஆளும் கட்சியின் பக்கம் செல்லத் தயாரான போது 'தவறியேனும் எமது பக்கம் வந்துவிட வேண்டாம்' என தெரிவித்து பிரதமர் ஹரிணி அமரசூரிய அவரைத் தடுத்து நிறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையின்போது எதிர்க்கட்சி நாடாளுமன்ற தயாசிறி கேள்விக்குப் பிரதமர் பதிலளித்துக்கொண்டிருந்தார். இந்நேரத்தில் எதிர்க்கட்சியின் பக்கமிருந்து ஆளும் கட்சிப் பக்கமாக திலித் ஜயவீர செல்ல முயன்றபோதே, பிரதமர் இவ்வாறு தெரிவித்து அவரைத் தடுத்தார்.

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான திலித் ஜயவீர, எதிர்க்கட்சியில் சில நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் ஏதோ கதைத்து விட்டு, ஆளும் கட்சியின் பக்கத்தில் அமைச்சர் ஒருவரைச் சந்திப்பதற்காக சபைக்கு நடுவில் செல்ல முயன்றார். நாடாளுமன்ற சம்பிரதாயப்படி சபையின் நடுவில் மறுபக்கத்திற்கு சென்றால், அது கட்சித் தாவலாகவே கருதப்படும்.

இந்நிலையில் திலித் ஜயவீர அமைச்சர் ஒருவரைச் சந்திப்பதற்காக சபைக்கு குறுக்காகச் செல்ல முயன்றார். இதன்போது எதிர்க் கட்சியிலிருந்த அஜித் பி பெரேரா உள்ளிட்ட சிலர் அவ்வாறுபோகவேண்டாம் என்று அவரைத் தடுத்தனர். அத்துடன் ஆளும் கட்சியின் பக்கத்தில் இருந்தவர்களும் இங்கே வர வேண்டாம் என்று அவருக்குக் கூறினர்.

இதன்போது சபையில் உரையாற்றிக்கொண்டிருந்த பிரதமர் கலாநிதி ஹரிணி "நீங்கள் அந்தப் பக்கத்திலேயே இருந்து விடுங்கள். தவறியேனும் இந்தப் பக்கம் வந்துவிடவேண்டாம்" என்று சிரித்துக்கொண்டே தெரிவித்தார். இவ்வேளையில், தம்மைச் சுதாகரித்துக் கொண்ட திலித் ஜயவீர உடனடியாகத் தனது ஆசனத்திற்கு திரும்பிவிட்டார்.

# ரணிலின் ஆட்சியில் முன்வைத்த சட்ட வரைவுகளை நிறைவேற்றுக

## முன்னாள் நீதி இராஜாங்க அமைச்சர் கோரிக்கை

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான எமது ஆளும்தரப்புக் கடுமையான சூழ்நிலையில் பல புதிய சட்டங்களை இயற்றியதால்தான் நாடு இன்று பொருளாதார ரீதியில் பலமடைந்துள்ளது என்பதை எவராலும் மறுக்க முடியாது. எம்மால் முன்வைக்கப்பட்ட சட்ட வரைபுகளை திருத்தங்களுடன் சட்டமாக்குமாறு ஆளும்தரப்பிடம் கேட்டுக்கொள்கிறேன் என்று முன்னாள் நீதி இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரத்ன தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று வரவு செலவுத் திட்டத்தின் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சு மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2022. செப்டெம்பர் மாதத்துக்கு பின்னரான காலப்பகுதியில் நீதி இராஜாங்க அமைச்சராக செயற்பட்டேன். பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் அத்தியாவசிய காரணிகளை கருத்திற் கொண்டு பல சட்டங்களை இயற்றினோம். 2022 ஆம் ஆண்டு 14 சட்டங்களும், 2023 ஆம் ஆண்டு 11 சட்டங்களும், 2024 ஆம் ஆண்டு 11 சட்டங்களும் இயற்றப்பட்டன.

கடுமையான சூழ்நிலையில் புதிய சட்டங்கள் இயற்றப்பட்டதால் தான் நாடு இன்று பொருளாதார ரீதியில் ஸ்திரமடைந்துள்ளது என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். 90 சட்ட வரைபுகள் குறித்த குழுக்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள. ஆகவே அவற்றை சட்டமாக்குமாறு ஆளும்தரப்பிடம் கேட்டுக்கொள்கிறோம்.

நீதிமன்றக் கட்டமைப்பு முழுமையாக டிஜிட்டல் மயப்படுத்தப்படவேண்டும்.இதற்கு குறைந்தது 3.2 பில்லியன் ரூபா செலவாகும் என்ற மதிப்பிடப்பட்டது. தற்போதைய பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் அது சாத்தியமற்றது என்பதை அறிவோம்.இருப்பினும் நீதிமன்ற கட்டமைப்பை டிஜிட்டல் மயப்படுத்தும் செயற்பாட்டை கட்டம் கட்டமாக முன்னெடுக்க வேண்டும்.

ஏதேனும் குற்றச்செயலின் சந்தேகநபராகக் கருதப்படும் நபரை வீட்டுத் தடுப்புக் காவலில் வைக்கும் வகையில் சட்டத் திருத்த வரைபியை முன்னாள் நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ அமைச்சரவைக்கு முன்வைத்திருந்தார். ஆகவே இந்த வரைபை சட்டமாக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். சிறைச்சாலைகளில் காணப்படும் நெரிசலை குறைப்பதற்கு விசேட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். 2024ஆம் ஆண்டு 25ஆம் இலக்க குற்றவியல் தண்டனைச்சட்டக்கோவை சட்டம் திருத்தம் செய்யப்பட்டது. தடுப்புக் காவலில் இருந்த சந்தேக நபருக்கு தண்டனை தீர்ப்பு வழங்கும் போது அந்த நபர் தடுப்புக்காவலில் இருந்த காலத்தையும் அவரது தண்டனை காலத்துக்குள் உள்ளடக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே இந்த சட்டத்துக்கான ஒழுங்குவிதிகளை நிறைவேற்றுமாறு ஆளும்தரப்பிடம் கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# மாணவர்களை இலக்குவைத்து போதைப்பொருள்கள் விற்பனை

## கல்முனை வலயக் கல்வி பணிப்பாளர் தெரிவிப்பு

(ஷினாஸ்)

பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் விற்பனை இடம்பெற்று வருகிறது. நாளாந்தம் இவ்வாறான சம்பவங்கள் பதிவாகுவது கல்வித் துறையில் பணியாற்றுவோருக்கு பெரும் சவாலாக மாறியுள்ளது. பெற்றோர்கள் தமது பிள்ளைகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று கல்முனை வலை கல்வி பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் தெரிவித்தார்.



மருதமுனை அல் -ஹம்றா வித்தியாலயத்தின் பெற்றோர்கள் ஏற்பாடு செய்துநடத்திய தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் பொறுப்பதிபர் எம்.எம்.முஹம்மட் நியாஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து இங்கு உரையாற்றிய வலயக் கல்வி பணிப்பாளர் -

1978 ஆம் ஆண்டு மருதமுனையை தாக்கிய சூறாவளிக்கு பின்னர் இங்கு ஏற்பட்ட கல்விப்புரட்சி உலகமெல்லாம் மருதமுனை.. மருதமுனை.. என்ற பெயர் பேசப்படுவதற்கு காரணகர்த்தாவாக அமைந்திருந்தது. இந்த கல்விப் புரட்சியை மீள உருவாக்க வேண்டியது காலத்தின் தேவையாக மாறியுள்ளது. இன்று மாணவர்களைக் கையடக்க தொலைபேசி பாவனை போதை வஸ்து பாவனை போன்றவற்றிலிருந்து மீட்டெடுக்க வேண்டியது கட்டாயமாகும். அதிபர்கள் ஆசிரியர்கள் இவை தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும். பெறறோர்கள் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் தமது பிள்ளைகள் சித்தி அடைய வேண்டும் என்பதற்காக இரவு பகலாகக் கண்ணுக்குள் வைத்து குறிப்பாக தங்களுடைய இறக்கைகளுக்குள் வைத்து பிள்ளைகளை கண்காணிப்பது போல் தொடர்ந்தும் அவர்களை அவதானிக்க வேண்டும். மாணவர்களின் கட்டிளமைப் பருவம் என்பது அவர்களை திசை திருப்பி விடும். கையடக்க தொலை பேசியினால் தம்மை தானே அழித்துக் கொள்ளும் நிலை உருவாகியிருக்கின்றது. வலயக்கல்வி பணிப்பாளர் என்ற ரீதியில் குறிப்பாக மருதமுனையில் இருக்கின்ற ஏழு பாடசாலைகளுக்கும் ஏதாவது செய்ய வேண்டும் என்று நாம் பல முயற்சிகளை செய்திருககின்றோம். லட்சக்கணக்கான ரூபாக்களை இங்குள்ள பாடசாலைகளின் பௌதீக அபிவிருத்திக்கு ஒதுக்கீடு செய்திருக்கிறோம். அவற்றை நாம் எதிர்காலத்திலும் முடியுமானவரை முன்னெடுப்பதற்கு தயாராக இருக் கிறோம். ஆனால் மருதமுனை கல்வி இன்னொரு பக்கம் திசை மாறி இங்கு வீழ்ச்சி ஏற்படுகிறதா? என சிந்திக்க வைக்கிறது. இவை குறித்தும் கல்வித் துறையில் பணியாற்றுகிறவர்கள் சிந்திக்க வேண்டும். இன்றைய கௌரவிப்பு என்பது மாணவர்களுக்கான ஓர் ஊக்குவிப்பாகும். எதிர்காலத்திலும் சாதாரண பரீட்சை, உயர்தரப் பரீட்சையில் சிறந்த அடைவுகளைப் பெற்று இன்னும் பல பாராட்டுதல்களை மாணவர்களாகிய நீங்கள் பெற்றுக் கொள்ள வேண்டும். இதனை மாணவர்கள் கருத்தில் கொண்டு தமது கல்வி செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

இதில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி எம்.எச்.றியாஸா கௌரவ அதிதியாக கலந்து கொண்டதுடன், இந்த நிகழ்வில் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் அல்- ஹம்றா வித்யாலயத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் அதிதிகளினால் பரிசு, நினைவுச் சின்னம் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டார்கள்.

மாணவர்களின் கலாசார நிகழ்வுகளோடு நடைபெற்று இந்த நிகழ்வில் மாணவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டார்கள். கடந்த ஆண்டு வெளியான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் கல்முனை கல்வி வலயம், அகில இலங்கை ரீதியில் இரண்டாம் இடத்தை பெற்றுக் கொண்டமையை பாராட்டி பாடசாலை சமூகத்தினரால் வலயக் கல்வி பணிப்பாளர் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

இந்த நிகழ்வில், பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் பி. எம் நஸ்றுதீன், பழைய மாணவர் சங்க செயலாளர் எம்.என்.எம்.வசீம் உட்பட அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர் அமைப்பின் உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்








4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalaikkathir

# கிழக்கு மாகாண பொது சுகாதார பரிசோதகர்கள் சுகவீன விடுமுறை தொழிற்சங்கப் போராட்டம்

(தில்சாத் பர்வீஸ்)

கிழக்கு மாகாண பொது சுகாதார பரிசோதகர்கள் வியாழக்கிழமை சுகவீன விடுமுறை தொழிற்சங்க போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள சில பொதுச் சுகாதார காரியாலயங்களில் கடமையாற்றுகின்ற பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சுகவீன தொழிற்சங்க போராட்டத்தை மேற்கொண்டனர்.

சம்மாந்துறை பொதுச் சுகாதார காரியாலயத்தில் கடமையாற்றுகின்ற பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் வெள்ளிக்கிழமையும் சுகவீனப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இவர்கள் நேற்று இப்போராட்டத்தை தொடர இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தின் சுகாதார ஊழியர்களுக்கான கொடுப்பனவு வழங்கும் நடவடிக்கையின் போது பொது சுகாதார பரிசோதகர்கள் கருத்தில் கொள்ளப்படாமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்த சுகவீன விடுமுறை தொழிற்சங்க போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாட சந்தர்ப்பம் வழங்குமாறு கிழக்கு மாகாண அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் அதற்கு இதுவரை சாதகமான பதில் கிடைக்கப்பெறவில்லை என பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் சீ.எஸ்.முத்துகட ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

## சுகாதாரச் சீர் கேடுகளுடன் இயங்கும் தருமபுரம் சந்தை





கரைச்சிப் பிரதேச சபையின் கீழ் உள்ள தருமபுரம் பொதுச் சந்தை அண்மைக்காலமாக உரிய முறையில் கழிவகற்றல் நடவடிக்கை மேற்கொள்ளப்படாத நிலையில் காணப்படுவதாகவும் வாரத்தில் இரு நாள் அல்லது ஒரு நாளே கழிவற்றல் நடைபெறுவதாகும் இதன் காரணமாக சந்தை பகுதியில் தொடர்ச்சியாக கால்நடைகளின் உறைவிடமாக காணப்படுவதுடன் தற்பொழுது பெய்து வரும் மழை காரணமாக துர்நாற்றம் வீசுவது உடன் ஆங்காங்கே கால்நடைகளின் எச்சங்களும் மழையில் கரைந்தோடி நாளாந்தம் கொள்வளவு செய்யவருவோர் பெரும் அசோகரியங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவித்திருந்த போதிலும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில் காணப்படுவதாக சந்தை வியாபாரிகள் மற்றும் நுகர்வோர் தெரிவித்துள்ளனர். 316

## தொழிற்பயிற்சி வழிகாட்டல் பச்சிலைப்பள்ளியில்

மனிதவலு மற்றும் வேலை வாய்ப்புத் திணைக்களமும், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகமும் இணைந்து நடத்திய பச்சிலைப்பள்ளி பிரதேச மட்ட தொழிற்சந்தை மற்றும் தொழிற்பயிற்சி வழிகாட்டல் நிகழ்வு வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் த.ஜெயசீலன் தலைமையில், பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு குறித்த நிகழ்வு ஆரம்பமாகி நடைபெற்றது.

தொழிற்சந்தையில், மனித வலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களத்தின் மாவட்ட இணைப்பாளர் சி.சிவசொரூபனால் குறித்த நிகழ்வு பற்றிய தெளிவூட்டலுடன் தொழில் விருத்தி தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.

தொடர்ந்து கலந்து கொண்டிருந்த தொழில் வாய்ப்பினை வழங்கும் நிறுவனங்கள் மற்றும் தொழிற்கல்வி நிறுவனங்கள் தமது சேவைகள் தொடர்பாக இளைஞர் யுவதிகளுக்கு விளக்கமளித்ததைத் தொடர்ந்து, குறித்த தொழிற்சந்தை ஆரம்பமானது.

மனிதவலு மற்றும் வேலை வாய்ப்புத் திணைக்களத்தின் வருடாந்த வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமாக, குறித்த நிகழ்வு ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது.

பிரதேசத்தில் இருக்கின்ற வேலையற்ற இளைஞர் யுவதிகளுக்கு தனியார் துறைகளில் வேலைவாய்ப்பினை ஏற்படுத்தும் முகமாக குறித்த பிரதேச மட்ட தொழிற்சந்தை ஏற்பாடு செய்யப்பட்டது.

அந்தவகையில், தொழில் வழங்கும் தனியார் நிறுவனங்களை அழைத்து தொழில் வாய்ப்பை ஏற்படுத்துதலே இந்நிகழ்ச்சியின் முக்கிய நோக்கமாகும்.

இந்த நிறுவனங்கள் ஊடாக சேவைத்துறை, தனியார் வைத்தியசாலை, வெளிக்கள உத்தியோகத்தர் வெற்றிடங்கள், நிதிசார் நிறுவனங்களின் வெற்றிடங்கள், விவசாயத்துறை வெற்றிடங்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் பற்றிய ஆலோசனைகள் மற்றும் பாடசாலைக் கல்வியை நிறைவு செய்துள்ள மாணவர்களிற்கான தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டம் முதலான சேவைகள் வழங்கப்பட்டன.

குறித்த பிரதேச தொழிற்சந்தையில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளர் எஸ்.குணஜா, கணக்காளர் ர.சஞ்ஜீப், சமுர்த்தி வங்கி முகாமையாளர் ம.மதிவதனி, நிர்வாக உத்தியோகத்தர் சி.சயந்தினி, மனித வலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களத்தின் மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், தொழில் வாய்ப்பினை வழங்கும் நிறுவன உத்தியோகத்தர்கள், தொழிற்கல்வி வழங்கும் நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள், இளைஞர், யுவதிகள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. 113






## உற்பத்திகளை முன்னோக்கி கொண்டு செல்வது தொடர்பான கலந்துரையாடல்







உலக வங்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நிதியுதவியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த விவசாய நவீன மயமாக்கல் திட்டம் நிறைவடைகின்ற நிலையில் இந்தத் திட்டம் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட விவசாய உற்பத்திகளை முன்னோக்கிகொண்டுசெல்வது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சி மாவட்ட செலயலக திறன் விருத்தி மண்டபத்தில் நடைபெற்றது.

விவசாய அமைச்சின் தொழில்நுட்பத்திற்கான பணிப்பாளர் அனுர விஜேயதுங்க தலைமையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

மேற்படி கலந்துரையாடலில் விவசாய அமைச்சின் அதிகாரிகள், விவசாய நவீன மயமாக்கள் திட்ட பிரதிப்பணிப்பாளர், மாகாண பணிப்பாளர், விவசாய திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

எதிர் காலத்தில் விவசாய திணைக்கள பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் கண்காணிப்பின் கீழ் விவசாய அமைச்சால் குறித்த திட்டம் மேற்பார்வை செய்யப்படவுள்ளது. 316

# புத்தளம் கனமூலை முஸ்லிம் மகா வித்தி. பிரதான நுழைவாயில் திறந்து வைப்பு

(சியாஜ்)

புத்தளம் கனமூலை முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் பிரதான நுழைவாயில் திறப்பு விழா வெள்ளிக்கிழமை காலை 09 மணிக்கு பாடசாலையின் அதிபர் பீ.எம்.எம்.முஸ்னி தலைமையில் இடம்பெற உள்ளது.

மேற்படி பாடசாலையின் பிரதான நுழைவாயில் முன்னாள் அதிபர் எஸ்.எம் ஹனீபாவின் வேண்டுகோளுக்கு இனங்க தற போதைய அதிபர் பீ.எம்.எம் முஸ்னியின் வழிகாட்டலில் மர்ஹூம் எஸ் கதிர்மரிக்காரின் ஞாபகார்த்தமாக அன்னாரின் குடும்பத்தினரால் நிர்மானிக்கப்பட்டு அவரது புதல்வரான முன்னாள் கற்பிட்டி பிரதேச சபையின் உறுப்பினர் கே.எம்.எம் பைசல் மரிக்காரால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இத்திறப்பு விழாவிற்கு பாடசாலையின் ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவ மாணவிகள் சங்க உறுப்பினர்கள் என சகலரினதும் பங்களிப்புடன் இடம்பெற உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கல்மடுக்குளத்தின் கீழான பயிர்ச்செய்கைக் கூட்டம்






கிளிநொச்சி கிழக்கு நீர்ப்பாசன பிரிவிலுள்ள கல்மடுக்குளத்தின் கீழான 2025 ஆம் ஆண்டுக்கான பயிர்ச்செய்கைக்கூட்டம் கண்டாவளை பிரதேச செயலகத்தில் கண்டாவளை பிரதேச செயலாளர் த.பிருந்தாகரன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள பிரதி ஆணையாளர், பிரதி நீர்ப்பாசன பொறியியலாளர், கமநல காப்புறுதிச்சபை உதவிப்பணிப்பாளர், கிழக்கு பிரிவுக்கு பொறுப்பான நீர்ப்பாசன பொறியியலாளர், விவசாய திணைக்கள பிரதிப்பணிப்பாளர், கமநல சேவை நிலைய உத்தியோகத்தர்கள், கிராமசேவையாளர்கள், விவசாய திணைக்களம் சார்ந்த உத்தியோகத்தர்கள் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

2025 ஆம் ஆண்டு கல்மடுக்குளத்தின் கீழ் 2126 ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கையும் 150 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுதானிய செய்கையும் மேற்கொள்வதாக தீர்மானிக்கப்பட்டது. 316

# கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகரவுடன் இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலர் சந்திப்பு





(முகமட் இம்றான்)

கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகரவுடன் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தலைமையில், தலைவர் பிரியந்த பெர்ணான்டோ மற்றும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொருளாளர் தரங்க மற்றும் கிழக்கு மாகாண இலங்கை ஆசிரியர் சங்கத்தின் சிரேஸ்ட பிரதிநிகளான மாவட்ட தலைவர்கள், மாவட்ட செயலாளர்கள் ஆகியோர் சந்தித்தனர்.

சமகால கல்விப் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடல் மேற்கொண்டனர்.

ஆசிரியர் இடமாற்ற சமகால பிரச்சினைகள் மற்றும் இடமாற்ற சபையின் தீர்மானம் மாற்றியமைக்கப்படல், சமப்படுத்தல் என்ற அடிப்படையில் வழங்கப்படும் இடமாற்றங்களின் சட்டவழுவற்ற தன்மைகள் தொடர்பாகவும் -

அதிபர் இடமாற்ற மற்றும் பாடசாலை வழங்களில் உள்ள நீதிக்குப் புறம்பான செயற்பாடுகள்,சமகால பிரச்சினைகள் சட்ட வழுவற்ற ஆசிரியர் ஆலோசகர் நியமனங்கள்

சட்ட வழுவற்ற வளவாளர் நியமனங்கள் உடன் மறுசீரமைக்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றியும் -

உரிய காலத்தில் அதிபர், ஆசிரியர்களின் பதவியுயர்வு வழங்கப்படாமை மற்றும் சம்பள ஏற்றங்கள் வழங்கப்படாமை கிழக்கு மாகாணத்தின் பல வலயங்களில் கடமை நிறைவேற்று பணிப்பாளர்கள் கடமையாற்றுவதால் உரிய முறையில் விண்ணப்பம் கோரப்பட்டு வலயக்கல்விப் பணிப்பாளர் நியமனங்கள் வழங்கப்பட வேண்டும் என்றும் -

கிழக்கு மாகாணத்தின் வெற்றிடமாக உள்ள 4000 வரையிலான ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய புதிய நியமனங்கள் வழங்கப்பட்ட வேண்டியதன் அவசியத்தையும் -

கல்வியமைச்சின் சுற்றுநிருபத்திற்கு முரணாக கிழக்கு மாகாண தமிழ் வலயங்களில் நடைமுறைப் படுத்தப்படும் தரங்கணிப்பீட்டு படிவங்கள் நீக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் -

மூதூர், கிண்ணியா போன்ற வலயங்களில் எஸ்எல்ஈ.ஏ.எஸ் அதிகாரிகள் பற்றாக்குறையாக உள்ள நிலையில் பல வலயங்களில் அதிபர்களாக கடமையாற்றுபவர்கள் (எஸ்.எல்.ஈ ஏ. எஸ்.) உடனடியாக மூதூர், கிண்ணியா வலயங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட வேண்டியதன் அவசியம் பற்றியும் -

சட்ட வழுவற்ற பிரதி அதிபர் நியமனங்கள் உடனடியாக மீளப்பெறப்பட வேண்டியதன் அவசியம் பற்றியும் கிழக்கு மாகாணத்தின் கல்வி வளர்ச்சிக்கு எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய வெளிப்படைத்தன்மையும் நீதியானதுமான அபிவிருத்தி செயற்பாடுகள் பற்றியும் இலங்கை ஆசிரியர் சங்கம் நினைவூட்டியது.

இக்கலந்துரையாடலில் போது தரங்கணிப்பீட்டு படிவம் வலயக்கல்விப் பணிப்பாளர் வெற்றிடத்திற்கு விண்ணப்பம் கோரல், இடமாற்ற பிரச்சினைகள், அதிபர் பிரச்சினைகள்,

அதிபர் - ஆசிரியர்களின் பதவிய உயர்வு, வளவாளர் நியமனங்கள், எஸ்எல்ஈ.ஏ.எஸ் அதிபர் நியமனங்கள் மீளப பெறப்படல் போன்ற விடயங்கள் ஓர் இரு வாரங்களில் சீர் செய்யப்படுவதுடன் புதிய ஆசிரியர் நியமனங்கள் கல்வியியல் கல்லூரி மூலம் 400 நியமனங்கள், பட்டதாரி ஆசிரியர் நியமனங்கள் மூலம் விரைவில் நிவர்த்தி செய்ய முடியும் எனவும் ஆளுநர் கூறினார்.

# மாவடிப்பள்ளி திருட்டு தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகள்

(பாறுக் ஷிஹான்)

வீடு உடைக்கப்பட்டு நகை மற்றும் பணம் களவாடப்பட்ட சம்பவம் தொடர்பில் துரித விசாரணைகளை காரைதீவு பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் காரைதீவு பொலிஸ் பிரிவிற்குப்பட்ட மாவடிப்பள்ளி பகுதியில் சுமார் 4 1½2 பவுண் தங்க நகைகள் உட்பட பணம் கடந்த வியாழக்கிழமை இரவு திருடப்பட்டுள்ளதாக மறுநாள் வெள்ளிக்கிழமை வீட்டு உரிமையாளரால் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

குறித்த முறைப்பாட்டிற்கமைய கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் இப்னு அசார் ஆலோசனையில் காரைதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வழிகாட்டுதலில் பொலிஸ் அணி ஒன்று புலனாய்வு மற்றும் தேடுதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் குறித்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்ற வீட்டு உரிமையாளர்கள் குடும்ப சகிதம் அருகில் உள்ள சாய்ந்தமருது பிரதேசத்தில் உள்ள உறவினர் வீட்டுக்கு சென்று அன்றைய தினம் இரவு 10 மணியளவில் தமது வீட்டிற்கு மீண்டும் திரும்பியுள்ளனர்.

இந்நிலையில் திடிரென தமது கையடக்க தொலைபேசி ஒன்றை தேடிய நிலையில் நகைகள் வைக்கப்பட்டிருந்த அலுமாரி உட்பட அலுமாரி இருந்த அறை கதவு திறந்த நிலையில் காணப்பட்டதை அவதானித்துள்ளனர்.

பின்னர் வீட்டின் நிலைமையை பரிசோதனை செய்த போது வீட்டின் மேல் மாடியில் இருந்த கதவு அகற்றப்பட்டு அலுமாரியில் பாதுகாக்கப்பட்டிருந்த நகைகள் மற்றும் பணம் திருடப்பட்டிருந்ததை அவதானித்துள்ளனர். உடனடியாக பொலிஸாருக்கு சம்பவம் தொடர்பில் தெரிவிக்கப்பட்ட நிலையில் சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் மாவடிப்பள்ளி உட்பட புறநகர் பகுதியில் அண்மைக்காலமாக திருடர்களின் நடமாட்டம் அதிகரித்துள்ள நிலையில் பொதுமக்கள் விழிப்பாக இருக்குமாறு பொலிஸார் கேட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

## அரச.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கமாக கொண்டு இவ்வாறு ஜனாதிபதி அலுவலகத்திற்கு சொந்தமான வாகனங்களை விற்பனை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி 9 டிபெண்டர் ரக ஜீப்கள், வொல்வோ ரக ஜீப் ஒன்று, க்ரயிஸ்லர் ரக வாகனம் ஒன்று, மஹேந்திரா பொலெரோ வாகனம் ஒன்று, ரோஸா பஸ் ஒன்று, டிஸ்கவரி வாகனம் மற்றும் டொயாடோ மோட்டார் வாகனம் உள்ளடங்களாக 15 வாகனங்கள் நேற்று ஏலமிடப்பட்டிருந்ததுடன், மிகுதி வாகனங்களும் விரைவில் ஏலமிடப்படவுள்ளன.

இந்த வாகனங்கள் ஜனாதிபதி செயலகத்தின் நிரந்தர பணிக்குழாமிற்காக வழங்கப்பட்டிருந்த வாகனங்கள் இல்லை என்பதுடன், முன்னாள் ஜனாதிபதியினால் தனது பதவிக் காலத்தில் அரசியலமைப்பின் 41 (1) உறுப்புரையின் கீழ் நியமிக்கப்பட்ட ஆலோசகர்கள் மற்றும் பணிக் குழுவினால் பயன்படுத்தப்பட்ட வாகனங்களாகும்.

இந்த வாகனங்ளை கொள்வனவு செய்வதற்கு பெருமளவான கேள்வி காணப்பட்டதுடன் ஏலங்களை ஏற்றுக்கொள்வது நேற்று பகல் 12.00 மணி வரையில் இடம்பெற்றதுடன், இரவு 8.00 மணி வரையில் ஏலம் திறக்கப்பட்டது. இந்த சந்தர்ப்பத்தில் 199 வர்த்தகர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

## மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலாளர் நாயகமும் முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மக்கள் நலனுக்காக ஒன்றிய அழைப்பு விடுத்தால் எனது பங்களிப்பு நிச்சயமாமிருக்கும் எனத் தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கட்சிகளின் ஒன்றிணைவு தொடர்பில் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் சிவஞானம் தெரிவித்த கருத்து தொடர்பில் அவரிடம் கேட்டபோது இதனைத்

தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் அன்றிலிருந்து இன்று வரை தமிழ் மக்களின் நலன் சார்ந்து எனது அரசியல் செயல்பாடுகளை மேற்கொண்டு வருகிேறன் என்பது யாவரும் அறிந்த விடயம். தமிழ் மக்களின் அரசியல் அபிவிருத்தி மற்றும் அன்றாட பிரச்சினைகளுக்கு தீர்வு காணுவதே எனது அரசியல் அவா.

துரதிஷ்டவசமாக பல சந்தர்ப்பங்கள் கிடைத்தபோதும் தமிழ் கட்சிகளின் ஒத்துழைப்பு உரிய நேரத்தில் கிடைக்காத காரணத்தினால் மக்களுககான தீர்வினை எட்ட முடியாத சூழ்நிலை ஏற்பட்டது.

தற்போது உள்ளூராட்சி மன்ற தேர்தலை தமிழ் கட்சிகள் ஓரணியில் எதிர்கொள்வதா அல்லது தேர்தலின் பின்னர் ஓரணியில் செயல்படுவதா என்ற விவாதம் இடம்பெற்று வருகின்றன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை தமிழ் கட்சிகள் எதிர்கொள்வது தொடர்பில் என்னுடன் சிலர் பேசினார்கள் அது நட்பு நீதியாக இடம்பெற்ற தவிர உத்தியோபூர்வமாக பேசுவதற்கோ கலந்துரையாடுவதற்கோ எனக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.

உள்ளூர் ஆட்சி மன்ற தேர்தலை பொறுத்தவரையில் ஒற்றுமை என்கின்ற விடயம் தமிழ் மக்களின் நலன் சார்ந்து கட்சிகளுக்கிடையில் ஒற்றுமை அல்லது ஒன்றிணைவு இருக்க வேண்டும் என்பதே என்னுடைய நிலைப்பாடு. கடந்த காலங்களில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தொங்கு சபைகளில் ஆட்சி அமைப்பதற்கு ஈழ மக்கள் ஜனநாயக கட்சி ஆதரவை வழங்கியது.

குறிப்பாக சொல்ல வேண்டுமானால் யாழ். மாநகர சபையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைப்பதற்கு ஆதரவு வழங்கி இமானுவேல் ஆனல்ட் முதல்வர் ஆனார். அதேபோன்று, யாழ். மாநகர சபையில் மணிவண்ணுக்கு ஆதரவு வழங்கி அவரை முதல்வராக தெரிவு செய்வதற்கு உதவினோம்.

அதுமட்டுமல்லாது, வேறு பிரதேச சபைகளிலும் மக்கள் நலன் சார்ந்த வரவு செலவுத் திட்டங்கள் முன்வைக்கப்படும் போது பாதீட்டை தோற்கடிக்காமல் வெற்றி பெறுவதற்கு எமது கட்சி பங்களிப்பை வழங்கியுள்ளது. தற்போது எமது ஈழ மக்கள் ஜனநாயக கட்சி உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்பாளர்கள் தயார்படுத்தல்களில் ஈடுபட்டு வருகிறோம்.

ஆகவே தமிழ் மக்களின் நலனுக்காக செயற்படும் ஈழ மக்கள், ஜனநாயக கட்சி மக்கள் நலனுக்கான ஒன்றிணைவு அவசியம் என கருதும் பட்சத்தில் ஒன்றிணைந்து செயல்படுவதற்கு தயாராக இருக்கிறேன் - என்றார்.

## ஐக்கிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரத்தையும், கௌரவத்தை சபை முதல்வருக்கு விட்டுக்கொடுக்காதீர்கள் என்று சபாநாயகரிடம் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்றைய அமர்வின் போது எரிபொருள் நிரப்பு நிலையங்களின் முன்பா கத் தோற்றம் பெற்றுள்ள வரிசை தொடர்பில் எதிர்க்கட்சியின் உறுப்பினர் ரவி கருணாநாயக்க மேலதிக கேள்விகளை முன்வைக்க அனுமதி கோரினார். இதற்கு சபாநாயகர் அனுமதி வழங்க மறுத்தார். மேலதிக கேள்விகளுக்கு இடமளிக்க முடியாது என்று சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க குறிப்பிட்டார்.

மேலதிக கேள்விக்கு அனுமதி மறுக்கப்பட்டதற்கு எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்களான கயந்த கருணாதிலக்க, முஜிபூர் ரஹ்மான், தயாசிறி ஜயசேகர ஆகியோர் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தினர். இதனால் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளுக்கு இடையில் கடும் தர்க்கம் ஏற்பட்டது.

இதன் போது எழுந்து உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி, சபைக்கு தலைமை தாங்கிய சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவை விழித்து, நிலையியல் கட்டளையின் 91 பிரிவு மற்றும் 92 (அ) உப பந்தி ஆகியவற்றை குறிப்பிட விரும்புகிறேன். சபாநாயகர் முதல் நிலையியற் கட்டளையின் விடயங்களைக் கற்றுக கொள்ளவேண்டும்.

தேசிய பிரச்சினைகள் தொடர்பில் கேள்வி வேளையின் போது மேலதிக கேள்விகளை கேட்கும் உரிமை அனைவருக்கும் உண்டு. நாடாளுமன்ற நிலையியல் கட்டளை ஆளும் மற்றும் எதிர்தரப்பினர் என்று பிரித்து தயாரிக்கப்படவில்லை.

நாடாளுமன்றத்தின் தலைவர் சபாநாயகர் ஆனால் இன்று சபை முதல்வர் சபாநாயகரை இயக்குகிறார். சபை முதல்வர் சைகைக்கு அமையவே நீங்கள் (சபாநாயகர்) செயற்படுகின்றீர்கள். ஆகவே உங்களை (சபாநாயகரை நோக்கி) சபாநாயகர் என்று அழைப்பதா அல்லது சபை முதல்வர் என்று அழைப்பதா?

கடந்த ஆளும்தரப்பு சபாநாயகர் கைபொம்மை போல் செயற்பட்டார். விளைவு என்னவாயிற்று என்பதை அறிவீர்கள். ஆகவே சபாநாயகர் பதவிக்கான அதிகாரம் மற்றும் கௌரவத்தை சபை முதல்வருக்கு விட்டுக்கொடுக்காதீர்கள், எதிர்க்கட்சிகளின் கருத்துக்களுக்கும் மதிப்பளியுங்கள் என்று சபாநாயகரை நோக்கி குறிப்பிட்டார்.

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர்களிடமிருந்தோ பணத்தை மீட்டெடுப்பதில் தனது சிறப்பு கவனம் செலுத்தியுள்ளது.

கடந்த காலங்களில் பல்வேறு விஷயங்களை விசாரிக்க 14 ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும், அவற்றில் இரண்டின் பரிந்துரைகள் மட்டுமே செயல்படுத்தப்பட்டுள்ளதாகவும் ஆளும் தரப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில், உபாலி அபேரத்னவின் தலைமையில் நிறுவப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு, இந்த நாட்டின் மக்களின் பணத்தில் மூன்றரை மில்லியன் ரூபாய்க்கும் அதிகமான தொகையை மோசடி செய்ததாக பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

இந்தப் பணத்தை ஆணையத்தை நிறுவிய திரு. கோட்டபய ராஜபக்ஷவிடமிருந்தோ அல்லது உபாலி அபேரத்ன உள்ளிட்ட மூன்று ஆணைய உறுப்பினர்களிடமிருந்தோ மீட்டெடுக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

பின்னர் உச்ச நீதிமன்றம் உபாலி அபேரத்ன ஆணையத்தின் அனைத்து பரிந்துரைகளையும் ரத்து செய்து, அவை அனைத்தும் சட்டவிரோதமானவை என்று கூறியதாக திரு. விஜேபால மேலும் கூறினார்.

## தேசபந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிசெம்பர் 31 மாத்தறை வெலிகம டபிள்யூ-15 விடுதியில் நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பாக அப்போதைய பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் உட்பட 8 பேரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதற்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தை சேர்ந்த நான்கு குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. அக்குழுக்கள் தேசபந்து தென்னகோனின் ஹோகந்தர வீட்டையும் கிரியுல்லா வீட்டையும் சோதனை செய்தபோதும், அவர் அங்கு இல்லை என்று பொலிஸார் தெரிவித்தார்.

இதற்கிடையில், பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள தேசபந்து தென்னகோன் தலைமறைவாக இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில் அவருக்கு பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

தேசிய மக்கள் சக்தி ஆட்சி இதுவரை இனவாதம் பேசவில்லை. வரவேற்கின்றோம். தமிழர்கள் இந்த நாட்டில் ஒரு பலமான சக்தி. இதனை முழுமனதோடு ஆட்சியாளர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தமிழர்கள் நாம் நீதி கேட்கின்றோம். பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படுதல் வேண்டும். ஜனாதிபதியும் தனது நேற்றைய உரையில் குறிப்பிட்டிருந்தார். நடந்தால் வரவேற்கின்றோம்.

காணாமல் ஆக்கப்படடோரின் உறவுகளுக்கு நீதி கிடைக்கவேண்டும். நான் சொல்வதெல்லாம் உண்மை, உண்மையைத் தவிரவேறொன்றுமில்லை.

போர் மௌனிக்கப்பட்டபோது தமது உறவுகளை, குறிப்பாக கணவரை மனைவியும், மகன், மகளை பெற்றோரும் வட்டுவாகல் சப்தகன்னிமார் ஆலய முன்றலில் ஒப்படைத்தார்கள். தடுப்புமுகாம்கள், கடல்எனப் பல இடங்களிலும் சரணடைந்தார்கள்.

வட்டுவாகலில் ஒப்படைக்கப்பட்டவர்களை கொக்குத்தொடுவாய் நோக்கியும், கேப்பாப்புலவு நோக்கியும், வட்டுவாகல் கடற்கரை நோக்கிய பாதையிலும் பஸ்களில் கொண்டுசெல்லப்பட்டார்கள்.

இலங்கைப் படையினரிடம் தான் ஒப்படைத்தோம். இன்னும் காணவில்லையே அவர்கள் எங்கே என்று தேடுகின்றார்கள். நீதிஅமைச்சரே நீதி தாருங்கள். நியாயப்படி நடந்து கொள்ளுங்கள்.

வட்டுவாகல் கடற்கரைப் பாதை நோக்கி பேருந்தில் ஏற்றிக்கொண்டு சென்றவர்களை விட்டு விட்டு பேருந்துகள் மட்டும் திரும்பி வந்ததாகவும் மக்கள் சொல்கின்றார்கள்.

வட்டுவாகல் தனித்தமிழ் சைவக்கிராமமாகும். பௌத்தர்கள் இல்லாத இடத்தில் ஒரு பெரியவிகாரை அமைக்கப்பட்டுள்ளது. இறுதிக்கட்ட யுத்தத்தின் போது சரணடைந்தவர்களை கொண்டுசென்று, படுகொலைசெய்து புதைத்துவிட்டு அதன் மேல் இவ்வாறு பெரியவிகாரை இங்கு அமைத்துவிட்டதாத மக்கள் கூறுகின்றனர். உங்களின் மடியில் கனமில்லை என்றால் இதனை நிரூபியுங்கள்.

விகாரையை அகற்றி ஆழமாகத் தோண்டுங்கள். அல்லது புதிய தொழில்நுப் முறை யில் ஆழத்தில் இருப்பவற்றை அறியக்கூடியதான நவீன கருவிகளைப் பயன்படுத்தி உண்மையை வெளிப்படுத்துங்கள்.

கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழிக்கும் நீதியைத்தாருங்கள். சிலவேளை நீங்கள் நீதயைத்தரும்போது, நீதி பதி சரவணராஜா போல்தான் உங்களுக்கும் நீதிகிடைக்குமோ- தெரியாது. ஆனால் இன்றைய அரசை நம்புவோம் .

அதேபோல் முல்லைத்தீவில் மக்களின் காணிகள் அரச திணைக்களங்களால் அபரிக்கப்பட்டுள்ளன. 2009ஆம் ஆண்டிற்குமுன்பு 2,22006 ஏக்கர்தான் அடர்ந்த காடுகள் உட்பட வனஇலாகாவின்கீழ் இருந்தது. 2009ஆம் ஆண்டின் பிற்பாடு 4,32121ஏக்கர் காணிகள் வனஇலாகாவிடம் உள்ளது.

மக்களுடைய பயன்பாட்டில் இருந்த சிறுதானியப் பயிர்ச்செய்கை, தோட்டப்பயிர்ச்செய்கை, நெற்பயிர்ச்செய்கைசெய்த மக்களின் காணிகளை, கிராமஅலுவலர், காணி உரிமையாளர்கள், பிரதேசச்செயலாளர், மாவட்டச செயலாளர் யாரிடமும் கேட்காமல் எல்லைக்கற்களையிட்டு தங்களுடைய கட்டுப்பாட்டில் கொண்டுவந்துள்ளார்கள்.

இந்நிலையில் தங்களுடைய வாழ்வாதாரத்துக்குரிய பயன்பாட்டில் இருந்த காணிகள் இல்லாது மக்கள்படும் துன்பங்கள் ஏராளம். நான் குறிப்பிடும் விடயங்கள் முல்லைத்தீவில் மட்டுமல்ல மன்னார், வவுனியாவிலும் உள்ளது.

படையினரும் எமது மக்களின் வாழ்வாதார மற்றும் குடியிருப்புக் காணிகளை அபகரித்து வைத்துள்ளனர். முல்லைத்தீவில் 100க்கு மேற்பட்ட படையினர் முகாம்கள் காணப்படுகின்றன. அங்கிருக்கும் மக்கள் தொகை யின் அரைவாசிக்கு படையினர் அதாவது இரண்டு மக்களுக்கு ஒரு படையினர் காணப்படுகின்றனர். கிட்டத்தட்ட 35000 ஏக்கர் காணிகள் படையினரிடம் காணப்படுகின்றன.

இதில் பெரும்பகுதி காணிகள் மக்களுடைய வாழ்வாதாரத்துக்கு ரியதும், குடியிருப்புக்காணிகளு மாகும். இப்படி இருக்க நாங்கள் எப்படி பாதுகாப்பு அமைச்சின் வாக்குளிப்பில் ஆதரிப்பது. எனவே கௌரவ நீதிஅமைச்சர் அவர்களே இந்த விடயங்களுக்கு நீதிதாருங்கள் என்று கேட்கின்றோம் என்றார்.

## மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றோல் பெற்றுக கொண்டனர். குறிப்பாக மேர் டார்சைக்கிள் ஓட்டிகள் பெற்றோலைப் பெறுவதற்காக நீண்ட வரிசைகளில் காத்திருந்தனர்.

எரிபொருள் நிரப்பு நிலையங்கள் எரிபொருளைக் கொள்வனவு செய்வதிலிருந்து விலகிவிட்டதாக அறிவித்ததைத் தொடர்ந்து பெற்றோலைப் பெற மக்கள் நீண்ட வரிசையில் றிக்கத் தொடங்கியுள்ளனர். மீண்டும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் என்கிற அச்சமு இதற்குக் காரணம். எனினும் போதியளவு எரிபொருள் கையிருப்பில் இருப்பதாகவும் அதனால் மக்கள் அச்சப்படத் தேவையில்லை என்றும் ஆளும்தரப்பு அறிவித்துள்ளது.

## மேலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்துவதற்காக பயன்படுத்தப்பட்ட தொலைபேசி சிம் அட்டையை வழங்கிய சந்தே கநபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மினுவாங்கொடை மெதகொவ்வ மற்றும் துனகஹ பகுதி களை சேர்ந்த 28 மற்றும் 31 வயதான சந்தேகநபர்களே இதன் போது கைது செய்யப்பட்டுள்ளனர். கணேமுல்ல சஞ்சீவ கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் இதுவரை 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

## கல்லடியில் 19 வயது யுவதி மர்மச் சாவு

(சியாஜ்)

புத்தளம் கல்டி பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் 19 வயது யுவதி ஒருவர் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார் என புத்தளம் தலைமையக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் புதன்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது –

சம்பவத்தன்று, யுவதி தனது வீட்டில் மயங்கிய நிலையில் காணப்பட்டுள்ளார். அவரது பெற்றோர்கள் அவரை புத்தளம் ஆதார வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

இதன்போது யுவதியை சோதனையிட்டு பார்த்த வைத்தியர்கள், யுவதி ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் எனத் தெரிவித்துள்ளனர்.

யுவதியின் உடற்பாகங்கள் அரச பகுப்பாய்வு திணைக்களத்துக்கு பரிசோதனைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் புத்தளம் தலைமையக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சீருடை அறிமுகம்






(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக் கழக சீருடை அறிமுகம், வீரர்கள் கௌரவிப்பு மற்றும் வர்ண இரவு கலை நிகழ்ச்சிகள் கழக செயலாளர் எம்.எல்.எம். பஸ்மீரின் நெறிப்படுத்தலில் கழகத் தலைவர் எம்.ஐ.எம். றிபாஜ் தலைமையில் சாய்ந்தமருது அல்- ஜலால் வித்தியாலய கேட்போர் கூடத்தில் வெள்ளிக்கிழமை இரவு கோலாகலமாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஈ.சி.எம். நிறுவன தவிசாளரும், பிரபல சமூக சேவகருமான பொறியியலாளர் கலாநிதி யூ.கே. நாபீர் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்பித்தார். மேலும் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சட்டத்தரணி துல்ஹர் நயீன் துல்ஷான், மாற்றத்துக்கான முன்னணியின் தவிசாளர் சிரேஷ்ட சட்டத்தரணி எம்.ஐ. றைஸுல் ஹாதி, சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எல். சம்சுதீன், கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு பணிப்பாளர் சபை முன்னாள் உறுப்பினர் யூ.எல்.நூருல் ஹுதா, அல்- அமானா நற்பணி மன்றத்தின் தலைவர் ஏ.எல்.ஏ. பரீட், சாய்ந்தமருது அல்- ஜலால் வித்தியாலய அதிபர் ரீ.கே.எம். சிராஜ் உட்பட வர்த்தக பிரமுகர்கள், கல்விமான்கள், விளையாட்டு உத்தியோகத்தர்கள்,

இளைஞர் சேவை அதிகாரிகள், கழக நிர்வாகிகள், வீரர்கள், அவர்களின் குடும்பத்தினர் என பலரும் கலந்து கொண்டனர். தேசிய புகழ்பெற்ற பிரபல கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகளும், சாகச நிகழ்ச்சிகளும் நடைபெற்ற இந்நிகழ்வில் மைதானத்தில் சிறந்த முறையில் தனது திறமையை வெளிகாட்டிய வீரர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் கழக நிர்வாகிகளும் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

இதன்போது கழகத்தின் 2025ஃ26 ஆம் ஆண்டுக்கான கழக சீருடையும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

# இன மற்றும் மதவேறுபாடுகளுக்கப்பால் புதிய கலாசாரத்தை உருவாக்குவோம்

## ஐக்கிய மக்கள் காங்கிரஸ் செயலாளர் தெரிவிப்பு

(றிபாஸ்)

நடைபெற இருக்கின்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ஐக்கிய மக்கள் காங்கிரஸ் நடளாவிய ரீதியில் எல்லா சபைகளிலும் தமக்கான ஆசனத்தை பெற்றுக் கொள்ளும் என ஐக்கிய மக்கள் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் ஏ.சி ஏஹியாகான் தெரிவித்துள்ளார்.



இதேவேளை,பல்வேறு சபைகளில் எந்த கட்சி ஆட்சி அமைக்க வேண்டுமாக இருந்தாலும் அச்சபைகளில் ஐக்கிய மக்கள் காங்கிரஸின் ஆதரவின்றி ஆட்சி அமைக்க முடியாது என அவர் மேலும் வலியுறுத்தினார்.

அண்மையில் சாய்ந்தமருதில் அவரது ஆதரவாளர்கள் மத்தியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர் –

திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் மக்கள் இங்குள்ள அரசியல் கட்சிகள் மீது வெறுப்படைந்த நிலையில் காணப்படுகின்றனர். கடந்த காலங்களில் அரசியல் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தி இங்கு தேர்தல் கேட்டவர்கள் மக்களுக்கு கொடுத்த வாக்குகளை மீறி செயற்பட்டுள்ளதுடன் அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றுவதற்கான எந்தவொரு நடவடிக்கைகளையும் முன்னெடுத்திருக்கவில்லை. இதனால் அரசியல் கட்சிகள் மீது வெறுப்படைந்துள்ள மக்கள் புதிய அரசியல் கலாசாரத்தை தேர்ந்தெடுப்பதற்கான தயார் நிலையில் உள்ளனர்.

இதனால்தான் நாங்கள் ஐக்கிய மக்கள் காங்கிரஸை ஸ்தாபித்து அதன் பால் மக்களை அழைத்து வருகிறோம் முன்னாள் அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே தலைமையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஐக்கிய மக்கள் காங்கிரஸ் மக்களுக்கு தேவையான விடயங்களை இனம் கண்டு மக்களின் காலடிக்குச் சென்று தீர்த்து வைப்பதற்கான அரசியல் முன்மாதிரியை நடைமுறைப்படுத்த உள்ளது.

இன, மத கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் எல்லா இன மக்களையும் ஒன்றிணைத்து புதிய அரசியல் கலாசாரத்தை தோற்றுவிப்பதற்கான வேலை திட்டத்தை ஐக்கிய மக்கள் காங்கிரஸ் ஆரம்பித்துள்ளது. அந்த வகையில் எதிர்கால அரசியல் செயற்பாடுகளை மக்களின் நன்மை கருதி செயல்படுத்துவதற்காக எமது அரசியல் உயர் கூடம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் ஐக்கிய மக்கள் காங்கிரஸ் போட்டியிடவுள்ளதுடன் இங்கு தமது ஆதரவை நிரூபிக்க காத்திருக்கிறது.

மக்களை ஏமாற்றி பொய் வாக்குறுதிகளைக் கூறி வந்த காரணத்தால் முஸ்லிம் காங்கிரஸிலிருந்து வெளியேறி புதிய அரசியல் கட்சியில் இணைந்து அதன் செயலாளராக செயல்பட்டு வருகிறேன். இதனால் இக்கட்சியின் மூலம் நமது பிரதேசம் பெரும் நன்மைகளை அடைய நாம் எதிர்பார்க்கிறோம்.

மக்கள் ஆதரவுடன் எமது ஆதரவு இல்லாமல் ஆட்சி அமைக்க முடியாத நிலைகளை அனைத்து சபைகளிலும் நாம் ஏற்படுத்துவோம். அதற்கான செயல் திட்டங்களை நாம் வகுத்து செயற்பட்டு வருகிறோம். – என்றார்.




காலைக்கதிர் Kalaikkathir

# மூதூர் தள வைத்தியசாலைகளுக்கு முன்பாக சுகாதார ஊழியர் தொழிற்சங்க போராட்டம்





(முஹம்மட் றிஸ்னாத்)

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மூதூர் தள வைத்தியசாலையில் சுகாதார ஊழியர்கள் வெள்ளிக்கிழமை கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தக் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நாடளாவிய ரீதியில் உள்ள வைத்தியசாலைகளுக்கு முன்பாகவும் நடைபெற்றன.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் இந்த வருடத்திற்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவில் சம்பள திருத்தத்தின் ஊடாக தமது சம்பளம் குறைக்கப்பட்டுள்ளதாக சுகாதார ஊழியர்கள் தெரிவித்தனர்.

மேலும் இவ்விடயத்தில் அரசாங்கம் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினர்.

# நுவரெலியா வைத்தியசாலைக்கு முன்பாக கவனவீர்ப்பு போராட்டம்



(கிஷாந்தன்)

நுவரெலியா அரச வைத்தியசாலையின் தாதியர் சங்கத்தினர் வெள்ளிக்கிழமை நுவரெலியா வைத்தியசாலைக்கு முன்பாக கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

வைத்திய ஊழியர்களுக்கான சலுகைகள் மற்றும் மேலதிக சேவைகால கொடுப்பனவு குறைப்புக்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்த கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

தற்போதைய அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ள புதிய வரவு-செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டுள்ள போதும் வைத்திய ஊழியர்களுக்கான சலுகைகள் மற்றும் மேலதிக சேவைகால கொடுப்பனவு குறைக்கப்பட்டுள்ளதாக தாதியர்கள் விசனம் வெளியிட்டனர். இதன்போது கருத்து தெரிவித்த தாதியர்கள், எமக்கு நியாயமான தீர்வை பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுக்கிறோம். புதிதாக எமக்கு எதுவும் தேவையில்லை. ஏற்கனவே இருந்த சலுகைகளையும் கொடுப்பனவுகளும் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம். - என்றனர்.

வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்ட போராட்டம் தாதியர்களின் கடமைகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் மதிய இடை வேளையில் மாத்திரமே முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பாக். தூதுவர் – சபாநாயகர் நாடாளுமன்றில் சந்திப்பு

இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் பாஹீமுல் அஸீஸ், சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்னவை நாடாளுமன்றத்தில் சந்தித்தார். இச்சந்திப்பில் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீரவும் கலந்துகொண்டார்.

இலங்கை சபாநாயகரை பாகிஸ்தானுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளுமாறு பாகிஸ்தான் தேசிய சட்டப் பேரவையின் சபாநாயகரின் அழைப்பிதழை உயர்ஸ்தானிகர் பாஹீமுல் அஸீஸ் இதன்போது சபாநாயகரிடம் கையளித்தார். குறிப்பாக வர்த்தகம் மற்றும் சுற்றுலாத் துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதன் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார். இருதரப்பு வர்த்தகத்தை மேம்படுத்தும் நோக்கில் இரு நாடுகளுக்கும் இடையே செய்துகொள்ளப்பட்டுள்ள சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை (குவயு) மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் உயர்ஸ்தானிகர் சுட்டிக்காட்டினார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கலந்துரையாடல்கள் உள்ளிட்ட இருதரப்பு மற்றும் பலதரப்பு மட்டங்களில் பாகிஸ்தான் இலங்கைக்கு அளித்து வரும் தொடர்ச்சியான ஆதரவிற்கு சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்ன தனது நன்றியைத் தெரிவித்தார்.

பொதுநலவாய நாடாளுமன்றங்களின் சங்கத்தின் ஆசிய மற்றும் தெற்காசிய பிராந்தியங்களின் முதலாவது ஒன்றிணைந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்கு லாகூர் சென்றதை நினைவுகூர்ந்த சபாநாயகர், அந்தப் பயணத்தின்போது பாகிஸ்தான் அரசாங்கத்தின் விருந்தோம்பலுக்கு நன்றி தெரிவித்தார். மேலும், புத்தரின் புனித நினைவுச்சின்னங்களைப் பாதுகாப்பது மற்றும் பௌத்த பாரம்பரியத்தைப் பாதுகாப்பதில் பாகிஸ்தானின் பங்களிப்புக்களை சபாநாயகர் பாராட்டினார்.

இலங்கை - பாகிஸ்தான் நாடாளுமன்ற நட்புறவு சங்கத்தை மீள ஸ்தாபித்தல் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஊடாக இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிகள் குறித்தும் இந்தக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டன.

# கணினி ஆய்வுகூடக் கையளிப்பு



(அபு அலா, முபீன்)

இமாம் கஸ்ஸாலி மகா வித்தியாலயத்திற்கு சுமார் 6 லட்சம் ரூபா பெருமதியான கனணி தொகுதியும் புனரமைக்கப்பட்ட கனணி ஆய்வு கூடமும் வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வமாக கையளித்து வைக்கப்பட்டள.

டியர்ஸ் அறக்கட்டளை அமைப்பின் டியர்ஸ் அக்கடமி நிறுவனத்தின் ஊடாக இந்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு அதன் இணைப்பாளரும், முன்னாள் கிழக்கு மாகாண சுற்றுலாத்துறை பணிப்பாளர் சபை உறுப்பினருமான சுலைமான் நாஸிறூனினால் உத்தி யோகபூர்வமாக பாடசாலையின் அதிபர் எஸ். எம்எம்.ஜாபீரிம் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக கல்முனை வலைய கல்விப் பணிமனையின் திட்டமிடல் பிரிவுக்கு பொறுப்பான பிரதி கல்விப்பணிப்பாளர் திருமதி அஸ்மா மலிக் கலந்துகொண்டார். கௌரவ அதிதிகளாக நிந்தவூர் கோட்டக்கல்வி அதிகாரி எம்.எல். எம்.முதரிஸ் மற்றும் ஆசிரிய ஆலோசகர் ஏ.அன்சார் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

கையளிக்கப்பட்ட கனணிகள் மூலமாக மாலை வேளைகளில் மற்றும் விடுமுறை நாள்களில் முதற்கட்டமாக இப்பாடசாலை மாணவர்களுக்கு ரயர்ஸ் அக்கடமியால் இலவச ஆங்கில மற்றும் கனணி பயிற்சிநெறிகள் நடைபெறவுள்ளன.

இதற்கான முறையான அனுமதியினை கல்முனை வலைய கல்வி அலுவலகம் மற்றும் கிழக்கு மாகாண கல்வி அமைச்சு வழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# நாணய நிதியத்தின் 4ஆம் கட்டம் கிடைத்ததில் மகிழ்ச்சி- ஷெஹான்

பொருளாதாரத்தின் மீதான நம்பிக்கையை மேலும் வலுப்படுத்தி, 3ஆவது மதிப்பாய்வை வெற்றிகரமாக முடித்ததைத் தொடர்ந்து, நீடிக்கப்பட்ட கடன் வசதி திட்டத்தின் 4ஆவது தவணையை பெற்றதில் மிகவும் மகிழ்ச்சியடைவதாக முன்னாள் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் செய்துள்ள பதிவில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையின் கீழ் இரண்டு வருடங்களில் மிக மோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து விரைவாக மீண்டிருப்பது நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கைகளின் வினைத்திறனுக்கான சான்றாகும்.

பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் கடன் நிலைத்தன்மை ஆகியவற்றிற்கான தூண்களாகச் செயல்பட்டு, உறுதியான பொருளாதார அடித்தளத்துடன் நாட்டை நாங்கள் ஒப்படைத்தோம்.

தற்போதைய நிர்வாகம் ஏற்கனவே முடிவுகளை வழங்கிய கடின உழைப்பைத் தொடர்வது மற்றும் நாங்கள் செயல்படுத்திய உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறந்த நடைமுறைகளை மாற்றுவதைத் தடுப்பது முக்கியம்.

உறுதிப்பாட்டைப் பேணுவதற்கும் எதிர்கால சவால்களை திறம்பட எதிர்கொள்வதற்கும் இதே போக்கில் இருப்பது அவசியம். இந்த மைல்கல்லை அடைவதற்கு அயராது உழைத்த குழுவை வழிநடத்தி, இலங்கையை வங்குரோத்து நிலையில் இருந்து வெளியே கொண்டு வரும் அதே வேளையில், வலுவான மற்றும் நெகிழ்ச்சியான பொருளாதார எதிர்காலத்தை உறுதி செய்ததில் நான் பெருமைப்படுகிறேன். இந்த மீட்புப் பயணத்தை வெற்றியடையச் செய்த அனைத்து பங்குதாரர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காலைக்கதிர் Kalaikkathir

# அமைச்சர் சந்திரசேகரனுடன் ஐ.நா. பிரதிநிதிகள் சந்திப்பு





கடற்றொழில் நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகருக்கும், ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை பிரதிநிதிகளுக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று நடைபெற்றது.

கொழும்பு மாளிகாவத்தையிலுள்ள அமைச்சில் நடைபெற்ற மேற்படி சந்திப்பில் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான நிரந்தர வதிவிட பிரதிநிதி மார்க் அன்ட்ரி பிரான்சே, ஐ.நாவின் உணவு மற்றும் விவசாய திட்டத்தின் உதவி பிரதிநிதி நளின் முனசிங்க, உணவு மற்றும் விவசாய அமைப்பின் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான கடற்றொழில்சார் நிபுணர் பாலித கித்சிறி ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இலங்கையின் கடற்றொழில்துறைக்கும், கடல் வளங்களை பாதுகாப்பதற்கும் ஐ.நா. மற்றும் அதன் துணை அமைப்புகளால் வழங்கப்பட்டு வரும் ஒத்துழைப்புகளுக்கு நன்றி தெரிவித்த அமைச்சர், இதனை மேலும் வலுப்படுத்துவதற்கு தேவைப்பாடும் தொழில்நுட்பம் உள்ளிட்ட உதவிகள் தொடர்பிலும் கோரிக்கை முன்வைத்தார்.

இலங்கையில் கடற்றொழிலாளர்கள் குறிப்பாக வடக்கு, கிழக்கிலுள்ள மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாகவும், அவற்றைத் தீர்ப்பதற்கு தமது அமைச்சால் முன்னெடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் பற்றியும் அமைச்சர் தெளிவுபடுத்தினார்.

2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் கடற்றொழில் அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டு நிதியில் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத்திட்டங்கள் பற்றி எடுத்துரைத்த அமைச்சர், ஐ.நாவின் ஒத்துழைப்புகள் வழங்கக்கூடியதாக இருந்தால் அதனை செய்யுமாறும் கோரிக்கை விடுத்தார்.

அதேபோல அண்மையில் தாம் யாழ்ப்பாணத்துக்கு மேற்கொண்ட விஜயம் தொடர்பில் அமைச்சரிடம் குறிப்பிட்ட ஐ.நா. பிரதிநிதிகள், இதன்போது கடற்றொழிலாளர்கள் சார்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பிலும் அமைச்சரிடம் சுட்டிக்காட்டினர்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு மக்கள் வழங்கியுள்ள ஆணை மற்றும் சமகால அரசியல் நிலைவரங்கள் பற்றியும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளன.




காலைக்கதிர் Kalaikkathir

# அனைத்து இன மக்களுக்கும் சகல மதங்களுக்கும் தேசிய மக்கள் சக்தி என்றும் சம அந்தஸ்துத் தரும்

## அமைச்சர் பிரதீப் உறுதி





(இரவீந்திரன்)

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அனைத்து இன மக்களுக்கும் சகல மதத்தினருக்கும் சம அந்தஸ்தும் சமவாய்ப்பும் வழங்கும் என்று பெருந்தோட்ட மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் கூறினார்.

புத்த சாசன சமய கலாசார அமைச்சும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வழிகாட்டலில் இரத்தினபுரி சைவ பரிபாலன சபை தலைவர் பொன் சிவாஜி தலைமையில் இரத்தினபுரி மாவட்ட இந்து ஸ்வயம் சேவா சங்கமும் இரத்தினபுரி மாவட்ட அறநெறி பாடசாலை அபிவிருத்தி ஒன்றியமும் இணைந்து இம்முறை இரத்தினபுரி இரத்தினேஸ்வர சிவாலயத்தில் தேசிய சிவராத்திரி விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இதில் , விசேட அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் இவ்வாறு கூறினார்.

புத்த சாசன மற்றும் சமய கலாசார அமைச்சர் சுனில் செனவி பிரதம அதிதியாகவும், இந்து கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் அனிருத் , சபரகமுவ சபையின் முன்னாள் உறுப்பினர் யெஹியா எம்.இப்ளார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.ஏ. விஜேதுங்க, உள்ளிட்ட பெருந்திரளான பக்தர்கள் கலந்து கொண்ட அந்நிகழ்வில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது -

நாட்டில் உள்ள அனைத்து மதங்களுக்கும் கோயில்கள் ,விகாரைகள், கிறித்தவ தேவாலயங்கள், முஸ்லிம் பள்ளிவாசல்கள் உள்ளிட்ட அனைத்து மத ஸ்தானங்களுக்கும் சம அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. மதம் மக்களின் உணர்வுடன் சம்பந்தப்பட்டது. சகல மக்களும் அதனை மிகவும் உணர்ச்சி பூர்வமாக அனுஸ்டிக்கின்றனர். மதம் சம்பந்தப்பட்ட விடயங்களில் நாம் மிகவும் கவனத்துடன் செயற்பட வேண்டும். மதங்கள்ஒன்றுக்கொன்று தாழ்ந்ததில்லை. அவ்வாறு நினைக்கவும் கூடாது.

இரத்தினபுரியில் சகல வசதிகளும் கொண்ட கலாசார மண்டபம் ஒன்று அமைக்கப்படும். இதற்காக இந்திய அரசாங்கத்திடம் உதவி கோரப்படும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் கூடிய விரைவில் இலங்கை வரவுள்ளார். அப்போது அதற்கான கோரிக்கைகள் முன்வைக்கப்படும்.

அத்துடன் பாரத பிரதமருடன் கலந்துரையாடி மலையகத்தின் அபிவிருத்தி பல் வேறு திட்டங்கள் முன் வைக்கப்படும்.

இரத்தினபுரி சிவன் கோயிலில் சிவராத்திரி விழா தேசிய விழாவாக கொண்டாடப்படுகிறது. அதனை மிகவும் உணர்ச்சி பூர்வமாக வரவேற்கின்றேன்.மகிழ்ச்சியடைகின்றேன்.

இதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அமைச்சருக்கும் இந்து திணைக்கள பணிப்பாளர் அனிருத் உள்ளிட்ட அனைத்து தரப்பினருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். - என்றார்.





## மாணவர் கௌரவிப்பு

(சியாஜ்)

மூதூர் டெஸ்லா கல்வி நிறவனத்தில் தரம் 2 மற்றும் 3 மாணவர்களுக்கான வருடாந்த மாணவர் கௌரவிப்பும் பெற்றோர் சந்திப்பும் வெள்ளிக்கிழமை 3 சீ.டி முனீர் ஞாபகார்த்த மண்டபத்தில் நிறுவனத்தின் பணிப்பாளர் நியாஸ் ஆஷா பலீன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் முதன்மை அதிதியாக இலக்கிய செயற்பாட்டாளர் கதிர் திருச்செல்வம், திருகோணமலை மாவட்ட முன்பள்ளி பணிப்பாளர் எஸ்.மஜ/ன் மற்றும் பலநோக்கு கூட்டுறவு சங்க பொது முகாமையாளர் எஸ்.கோணேஷ்பரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இந் நிகழ்வில் மாணவர்களுக்கு நடத்தப்பட்ட போட்டி நிகழ்ச்சிக்கான நினைவுச் சின்னங்களும், பதக்கங்களும், சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டதோடு நிகழ்வுக்கு மூதூர் ஜே.எய்.ஐ. நிறுவனம் பூரண அனுசரணை வழங்கிமையை குறிப்பிடத்தக்கது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.03.2025 இல் வெளியிடப்பெற்றது.